238

உ

# மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 1.] 1922ஹு மார்ச்சமீ 1உ [பகுதி 2.

இந்த அமராவதி யென்னும் நாவல்

ஸ்ரீமான்

ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்

இயற்றப்பட்டது

APR 1922
MADRAS

“ஆனந்தபோதினி” பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியாரால்

பிரசுரிக்கப்பட்டது

1922

[ரிஜிஸ்டர்ட்.

# மனமோகினி

## ஓர் மாதாந்தச் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதா யிருத்தலின், அதில்ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை ஆரம்பித்திருக்கின்றோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி சாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" எல நாவல் வெளிவரும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங்கொண்டது. வருஷ சந்தா ரூபா 2—8—0 இரண்டரைதான். வெளி நாட்டிற்கு 3—0—0. இதற்குச் சந்தாதாரராகச் சேர்வோருக்கு இரண்டரை ரூபாய்க்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்களை அடைதலும், சிரமமின்றி ஒவ்வொரு மாதத்திலும் வாசித்து வந்து ஒரு வருஷத்தில் இரண்டு புத்தகங்களை முடித்தலுமாகிய சௌகரியங்கள் கிடைக்கும். இதன் முதற் சஞ்சிகை 1922௵ பிப்ரவரி௴ 1௳ வெளியாகும். அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி, முதல் சஞ்சிகையை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

---

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டதினால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

ஆனால் துர் நடக்கைகளை யுடையவன். பிரம்மச்சாரியா யிருந்தாலும் குடி, சூதாடுதல், பரஸ்திரீகமனம், யாவற்றிலும் உழன்று கொண்டு கிடப்பவன். அதிக கடனாளி. தொழிலில் மட்டும் கெட்டிக்காரனென்றும், கண்டிதவான் என்றும், தைரியசாலி யென்றும் பெயர் பெற்றவன். தன் கீழ் உள்ள உத்தியோகஸ்தர்களை யெல்லாம் நிர்த்தாக்ஷணியமாகவே நடத்துபவன். ஆனால் மேல் கண்ட துஷ்ட நடக்கைகளில் மட்டும் அவர்களோடு கூடிக்கொண்டு உறவாயிருப்பான். ஸ்திரீகள் விஷயத்தில் மிக்க அக்கிரம நடக்கையுடையவன். எந்த ஸ்திரீயினிடத்திலும் கற்பென்ற ஒரு குணம் இல்லவேயில்லை யென்றும், தன்னுடைய அழகையும், ஒய்யார நடையையும், நேர்த்தியான உடை முதலியவற்றையும் கண்டால் எத்தகைய மாதும் தனக்கு வசப்பட்டு விடுவாள் என்றும் கருதும் மூட அகங்கார முடையவன்.

அவனுக்கு நமது காப்டென் உலக நாயகன்மேல் அந்தரங்கத்தில் மிக்க வெறுப்பே. ஏனெனில் உலக நாயகன் இவர்களுடைய கேளிக்கை சூதாட்டம் முதலிய நடக்கைகளில் இவர்களோடு சேருவதில்லை. இவர்கள் சிற்றின்ப விஷயங்களைப் பற்றிய தங்கள் தங்கள் நடக்கைகளைப் பெருமையாகப் பேசிக்கொள்வதை யவன் விருப்பம் வைத்துக்கேட்பதில்லை; சூதாட்டம் முதலியவற்றில் தலையிடுவதேயில்லை. அப்படி யிருந்தாலும் இவர்களுக்குத் தன் மேல் மனஸ்தாப முண்டாகும் வண்ணமாகத் தன் வெறுப்பைக் காட்டிக்கொள்வதில்லை. யாரிடத்திலும் சிநேகன் போலவே நல்ல வார்த்தையாகப் பேசிக்கொண்டிருப்பான். இவனுடைய இத்தகைய நடக்கை இந்தக் கர்னல் குமரவேலுக்கு வெறுப்பை யுண்டாக்கியது. ஆனால் அதை யவன் சற்



186427

றேனும் வெளியில் காட்டமுடியாது. ஏனெனில் உலகநாயக னுடைய அம்மானுகிய பிரபு அரசனுடைய நண்பர். மேலும் இந்தக் கர்னல் அவரிடம் அதிக கடன் வாங்கிவிட் டிருக் கிறான். அதனுல் அவருக்குக் கோபம் வரும்படி நடந்து கொண்டால் தனக்கு மிக்க கெடுதி யுண்டாகுமென்று அறிவான்.

கர்னல் குமரவேல் பாதைவழியே வந்துகொண் டிருந் தவன் அமராவதி யருகில் வந்ததும் குதிரையை நிறுத்தி விட்டு அவர்க ளாசாரப்படி அவளுக்கு வந்தன மளித்து என்னமோ கூறினுன். இதைக்கண்ட உலக நாயகன் இவர்க ளிருவருக்கும் அறிமுகமுண்டோ வென்று கருதினுன். அதற்குள் அமராவதியின் முகத்திலுண்டான வெறுப்பும் கோபமுமாகிய குறியைக்கண்டு கர்னல் அவளுக்குச் சற்றும் பிரியமில்லாத அவமரியாதையான ஏதோ மொழிகளைக்கூறி னுன் என்று அறிந்துகொண்டான்.

அச்சமயம் கர்னல் குதிரையினின்றிழிந்து, அமராவதி யின் கரத்தைப்பற்றினுன். அவள் மிக்க கோபத்தோடு வெடுக்கென்று கரத்தை யிழுத்துக்கொண்டு திரும்பிச் செல்ல முயன்றபோது, கர்னல் அவளுடைய இடுப்பில் தன் கரத்தைக் கொடுத்து துராக்கிருதமாக அவளைப் பிடிக்க முயன்றுன். அவளோ அடங்காமல் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றுள். இதைக்கண்ட உலகநாயகன் உடனே ஆற்றில் பாய்ந்து குதித்து இரண்டு நீச்சில் அக்கரை யேறி அமராவதியைப் பலவந்தப்படுத்திக்கொண் டிருக்கும் கர் னல் குமரவேலை ஒரே குத்தால் தரையில் வீழ்த்தினுன்.

கர்னல் குமரவேல் நமது உலகநாயகன் ஆற்றில் குதித் ததையாவது நீந்தி வருவதையாவது காணவில்லை. ஆனுல் அமராவதி மட்டும் யாவும் பார்த்ததோடு தன் துணைக்கு

வருவது யாரென்றும் தெரிந்துகொண்டாள். யாரோ வரும் காலடிச் சத்தத்தைக் கேட்டபின்பே கர்னல் திரும்பிப் பார்த்தான். வருகிறவன் உலகநாயகன் என்று அறிந்ததே தான் அமராவதியை விட்டுவிட்டால் அவனுக்குப் பயந்து அப்படி நடந்துகொண்டதாகத் தெரியும் என்று கருதி அவளை விடவில்லை. காப்டன் தன்னை யடித்துக் கீழே விழ்த்தியதே அவன் திடுக்கிட்டுப் பிரமித்துவிட்டான். அவ்வாறு நடக்குமென்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.

கர்னல் எழுந்திருந்தபோது அவன் முகத்தில் கோபத்தால் இரத்தம் ஏறியிருந்தது. அவனுக்கு மிக்க அவமானமாகவும் தோன்றியது. அவன் காப்டனை நோக்கி "காப்டன் உலக நாயகம்! நீ யுன் மேல் அதிகாரியை யடித்தாய்" என்றான். உலக நாயகன் கோபத்தோடு "என் மேல் அதிகாரி சுத்த முரட்டுப்பயலாகிய ஒரு கோழையைப் போல் அக்கிரம வழியில் நடந்தான்" என்றான். கர்னல் மிக்க கோபத்தோடு "என்ன கூறினாய் கோழை—முரட்டுப் பயல்." என்று கூறிக்கொண்டே தன் உடைவாளின் பிடியைத் தொட்டான்,

**உலக நாயகன்.**—"சரிதான். கத்தியை எடுத்தால் எடும். ஆனால் நான் நிராயுதபாணி. என் கத்தி யென்னிடமில்லை" என்றான்.

**கர்னல்.**—"நான் இதற்காக உன்னோடு சண்டை செய்வது கௌரவமாகாது. காப்டென் உலக நாயகம்! நீ யுடனே உன் வேலையில் வந்து சேரவேண்டும்" என்று கூறிவிட்டு உடனே குதிரைமேல் ஏறிக்கொண்டு சுக விலாசத்தின் திக்கே சென்றான். அவன் மனதில் இப்போது மிக்க கலக்கமே. ஏனெனில் ஸர்தார் பஞ்ச

நாதம் பிரபுவுக்கு அவன் அதிக பணம் கடன் கொடுக்கவேண்டும். இப்போது உலக நாயகனுக்கு எவ்வித மான தண்டனையாவது விதிக்கவேண்டுமென்ற எண்ணத்தால் அவன் மூன்றுமாத விடுமுறையில் இருந்த போதிலும் அவனை யுடனே வேலையில் வந்து சேரும் படி கட்டளையிட்டுவிட்டான். ஆனால் பிரபு எங்கே அதற்காகக் கோபித்துக்கொண்டு பணம் கொடுக்கத் தான் கேட்கப்போகும் தவணையை யெங்கே கொடுக்க மறுத்து விடுவாரோ என்று பீதியடைந்தான். ஆயினும் எப்படிப்பட்ட நிபந்தனைகளாயினும் ஒப்புக் கொண்டு தவணை வாங்கியே தீரவேண்டும். காப்டென் உலக நாயகனை வேலையில் வந்து சேரும்படி இட்ட கட்டளையை இரத்து செய்துவிட வேண்டுமாயினும் செய்வதே சரியென்று தீர்மானித்துக்கொண்டான்.

கர்னல் தூரத்தில் சென்றதே அமராவதி நலங்கிப் போன தன் உடை கூந்தல் முதலியவற்றைச் சீர்படுத்திக் கொண்டு உலக நாயகனை நோக்கி அவன் செய்த உதவிக்கு வந்தனமளித்து நாணத்தோடு "எனக்கு உதவி செய்து என் மானத்தைக் காப்பாற்றியதால் உமது மேல் அதிகாரியின் கோபத்திற்குத் தாங்கள் ஆளாகி விட்டீர்களென்று தெரிகிறது. உங்களுக்கும் அந்த மனிதனுக்கும் நடந்த சம்பாஷணையால் அப்படித் தெரிகிறது. அதற்காக மிக்க விசனப்படுகிறேன்'' என்றாள்.

**உலக நாயகன்.**—"உன் விஷயத்திற்காக நான் எத்தகைய அபாயத்தில் சிக்கிக்கொள்வதாயினும் சந்தோஷமாக அதை யனுபவிப்பேன். அத்துஷ்டனால் உனக்கு நேர்ந்த தொந்திரவிற்காக நான் மிக்க விசனப்

படுகிறேனாயினும் உனக்கு உதவிசெய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக மிக்க சந்தோஷ மடைகிறேன். உன்னை யுன்வாச ஸ்தலத்திற்குக் கொண்டுபோய்விட்டு விடுகிறேன் " என்றான்.

**கன்னிகை.**—"ஆம், தாங்கள் அவசியம் என் வீட்டிற்கு வந்து என் தாய்தந்தையர்களின் வந்தனத்தைப்பெற வேண்டும்" என்றாள்.

அவ்வாறே யிவர்க ளிருவரும் இரொட்டிக் கிடங்குக்குச் சென்றார்கள். இவர்கள் வெளிவாயிற் படியைக் கடந்து உள்ளே செல்லும் போது கர்னல் இரகுநாதன் எதிரில் வந்தார். உலகநாயகன் தேகமுழுமையும் நனைந்து ஜலம் ஒழுகிக் கொண்டிருப்பதையும் அவன் தன் புத்திரியோடு கூட வருவதையும் கண்டு மிக்க வியப்புற்றார். ஆனல் அமராவதி சுருக்கமாக நடந்த விஷயங்களைக் கூறியபோது அவர் மிக்க அன்போடு உலகநாயகன் கரத்தைப் பற்றிக் கொண்டு நன்றியோடு அவனுக்கு வந்தனமளித்து முன்னே அறைக்குள் சென்று ஈர உடைகளைக் களைந்து விட்டு வேறுடைகளை யணிந்து கொள்ளும் என்று அவனைத் தன் படுக்கை யறைக்கு அழைத்துச்சென்று, இரண்டு மூன்றுஉடுப்பு ஜதைகளை மேஜைமேல் வைத்து அவனுக்குப் பிரியமான உடுப்பை யணிந்து கொள்ளும்படி கூறிவிட்டு வெளியில் வந்து விட்டார்.

கர்னல் இரகுநாதனுக்குச் சின்னக் கட்சியார் என்றால் மிக்க வெறுப்பே யாதலால் அவர்களை யவர் ஏறக்குறைய விரோதிக ளாகவே பாவிப்பார். அதனுல்தான் முன்னாள் உலகநாயகன் மதனம்பாள் சீமாட்டியோடு தமது வீட்டிற்கு வந்திருந்தபோது நாம் சிநேகமா யிருக்க முடியாதென்று கூறினர். இப்போது அவையாவும் மறந்து விட்டார்.

உலகநாயகன் தன் புத்திரியை யாபத்தினின்று காப்பாற்றிய வன் என்ற ஒரு விசுவாசமே அவர் மனதில் உண்டாயிருந் தது. ஆதலின் அவன் வேறுடை யணிந்து அறையைவிட்டு வெளியில்வந்ததும் கர்னல் அவன் கரத்தைப்பற்றிக்கொண்டு நான் உம்மிடம் சினேகவாஞ்சை கொள்ள விருப்புள்ளவனாக இருக்கிறேன்; நீர் இன்று முழுமையும் என் விருந்தாளியாக என் வீட்டிலேயே யிருக்க வேண்டும்" என்றார். இவ்வார்த் தைகளைக் கேட்ட உலகநாயகன் மிக்க சந்தோஷமும் வியப் பும் அடைந்து,

"கர்னல் தாங்கள் அன்போடு கூறியவார்த்தைகளுக் காக நான் மெய்யாகவே மிக்க வந்தன மளிக்கிறேன். என் வரையில், இந்தக் கட்சி பேதத்தால் ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டி வருவது சற்றும் நியாயமானதாகத் தோன்றவில்லை. தங்கள் பிரியப்படி இன்று முழுதும் தங் களிடம் தங்கியிருக்க எனக்கு உண்மையாக மிக்க விருப் பமே. ஆனால் கர்னல் குமரவேல் என்னை யுடனே வேலை யில்வந்து சேரும்படி கண்டிப்பான கட்டளையிட் டிருக்கி றார். சைன்னிய உத்தரவை மீறி நடக்கலாகா தென்பது தாங்க ளறியாததல்ல. இன்று நடந்த விஷயத்திற்காக அவர் என்னை ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் மேல்அதி காரியின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வில்லை என்ற குற்றத் திற் குள்ளானால் எனக்குத் தீங்கிழைக்க அவருக்கு நானே இடங்கொடுத்ததாக முடியும்" என்றான்.

கர்னல் இரகுநாதன் "நீர் என் புத்திரிக்கு உதவி செய்ததால் உமக்குத் துன்பம் நேரிட்டதற்காக நான் மிக்க விசனப்படுகிறேன். நீர் ஒரு நாள் முழுமையு மிங்கிருப்ப தற்குக்கூடாதிருப்பதைக் குறித்தும் மிக்க விசனிக்கிறேன். ஆயினும் உமது மேல் அதிகாரியின் கட்டளைக்கு மீறி நட

ந்து அவர் கோபத்திற்கு இன்னும் ஆளாகும்படி ஒருபோ தும் கூறமாட்டேன். அப்படியிருந்தாலும் ஒன்றுமட்டும் செய்யவேண்டும். அதாவது: கொஞ்சம் சிற்றுண்டியேனும் அருந்திவிட்டுச் சென்றால்தான் என் மனம் திருப்தியடை யும். என் நன்றியறிதலை யிவ்வழியாகத்தான் நான் செய் கையால் காட்ட வேண்டும்" என்றார்.

உலக நாயகன் "தங்கள் பிரியம் அவ்வாறாயின் ஒரு மணிநேரம் இங்கிருக்கிறேன்" என்றான். கர்னல் உடனே அவனைத் தன் புத்திரியும் மனைவியு மிருக்கும் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு அமராவதி நடந்த சங்கதி யைத் தன் தாயாருக்குக் கூறிக்கொண் டிருந்தாள். தாயா ரும் புத்திரியும் உலக நாயகனைக் கண்டதும் மிக்க அன் போடு உபசரித்தார்கள். கர்னலின் மனைவி தன் புத்திரிக்கு அத்தகைய சமயத்தில் துணிகரமாக உதவி செய்ததற்காக அவனை மிகவும் புகழ்ந்து அவனுக்குத் தன் நன்றியான வந்தனங்களை யளித்தாள். அதற்குள் ஆகாரமும் ஒயின் முதலிய சாராய வகைகளும் வட்டிக்கப்பட்டன. கர்னலும் அவர் மனைவியும் தன்னிடம் மிக்க விசுவாசத்தோடு சம்பா ஷிப்பதைக் கண்ட உலகநாயகன் மிக்க சந்தோஷ மடைந் தான்.

நால்வரும் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் தன் மாமன் அவர்கள் வீட்டிற்குள் வந்திருந்ததும், அங்கு சிற் றுண்டி யருந்தியதும், வலிய கர்னலின் மனைவி புத்திரி இவர் களோடு அறிமுகம் செய்துகொண்டதும் கேள்விப்பட்ட அவனுக்கு மிக்க வியப்புண்டாயிற்று. அதோடு கர்னல் இரகுநாதன் பிரபுவுக்குப் பெருந்தொகைக்குக் கடன்பட் டிருப்பதை யிப்போதுதான் அறிந்தான். இயல்பாகவே தமது கடன்காரரிடம் சற்றேனும் இரக்கம் காட்டாது

அவர்களைக் குரூரமாக நடத்தும் குணமுடைய தன்மாமன் கர்னல் இரகுநாதன் விஷயத்தில் அவ்வளவு தயவுகாட்டியதும் அவர் பிரியப்படி ஏற்பாடு செய்வதாகக்கூறி அவரை அதைப்பற்றிக் கலவரப்பட வேண்டாமென்று கூறியதும், மாதரிடம் அவ்வளவு உபசரணையாகப் பேசியதும் உலக நாயகனுக்குச் சொல்லொணு வியப்பை யுண்டாக்கின. இதில் என்னமோ விசேஷக் கருத்திருக்கவேண்டுமென்று அவன் புத்தியிற்பட்டது.

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் ஒரு வேலைக்காரன் வந்து, தானியம் விற்கும் வர்த்தகன் வந்திருப்பதாகக் கர்னலிடம் கூற அவர் உடனே எழுந்து அவனைக் கண்டு பேசச் சென்றார். மறுநிமிடம் கர்னல் இரகுநாதரின் மனைவி தன் நாத்தியாகிய இராஜாம்பாளுக்கு ஆகாரம் அனுப்பாமல் வந்து விட்டதை நினைத்துக் கொண்டாள். புது ஆள் இருந்தபடியால் அவன் எதிரில் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்க லாகாதென்று அந்த வேலையை நிறைவேற்றத் தானே எழுந்து சென்றாள். இதனால் உலக நாயகனும் அமராவதியும் தனியாய்ச் சம்பாஷிக்கச் சமயம் வாய்ந்தது.

உலக நாயகன் அமராவதியைநோக்கி "உனக்கு உதவி செய்வதால் எனக்கு எத்தகைய தண்டனை நேரினும் அதை யனுபவிக்கச் சற்றும் பின்னடையேன். என்ன ஆபத்து நேர்வதாயினும் சந்தோஷமாகவே யனுபவிப்பேன். உன் நினைப்பே யெனக்கு எப்போதும் சந்தோஷத்தை யுண்டாக்கும்" என்றான்.

அமராவதி:—"அந்தக் கர்னல் குமரவேலின் கோபத்தால் தங்களுக்கு அதிக தொந்திரை நேரிடவில்லை யென்பதைப்பற்றி என் தந்தைக்கு ஒருகடிதம் எழுதுவீர்களல்லவா?" என்றாள்.

உலகநாயகன் "கட்டாயம் எழுதுவேன். என் விஷயத்தில் நீ யிவ்வளவு கவலை கொள்வதற்காக நான் மிக்க சந்தோஷ மடைகிறேன்" என்றான்.

கன்னிகை நாணத்தோடு "நான் அப்படிக் கொள்ளா விட்டால் நன்றி யில்லாதவளாக வல்லவோ கருதப்படுவேன். அந்தக் கர்னல் தங்கள் மேல் அதிகாரியா யிருக்கிற வரைவில், தங்களுக்குத் தீங்கிழைக்கும் வண்ணம் அவனுக்கு இடந்தரா திருப்பீர்க ளென்றே நம்புகிறேன்" என்றாள்.

உலகநாயகன் "உனக்கு உதவிசெய்ய நேர்ந்ததால் எனக்கு மிக்க சந்தோஷமே யுண்டாயிற்று. ஆனால் என் விடுமுறை நாட்களில் இன்னும் பன்முறை உன்னைக் காண்பதற்கும் உன் இனிய மொழிகளைக் கேட்டு மகிழ்வதற்குமில்லாமற் போனதற்காகவே மிக்க விசனிக்கிறேன்" என்றான்.

நேயர்களே! இவ்வாலிபர் இருவர் உள்ளத்திலும் பரஸ்பரக்காதல் ஜனித்து விட்டதென்பது நாம் கூறாமலே விளங்கும். முதலில் தான் எதிர்க் கட்சியாதலால் தன்னைச் சினேக மாக்கிக்கொள்ளக் கர்னல் இரகுநாதர் விரும்பமாட்டாரென்றே உலக நாயகன் மனதிற்குப் புலப்பட்டது. ஆனால் இப்போது நடந்த சம்பவத்தால் இவர்களுக்குள் நட்புண்டாய் விட்டது. தங்களுக்குள் பரஸ்பரக்காதல் உண்டா யிருப்பது இருவர் மனதிற்கும் புலப்பட்ட போதிலும், ஒருவரேனும் நாணத்தால் அதை வெளியிடத் துணியவில்லை. சற்றுநேரங் கழித்து இரகுநாதரும் அவர் மனைவியும் வந்துவிடவே இவர்கள் சம்பாஷணை நின்று விட்டது; அவர்க ளிருவரும் மறுபடி உலக நாயகனுக்கு வந்தனமளித்து, சீக்கிரத்தில் அவனுக்கு மறுபடி நல்வரவு கூறத்

தாங்கள் மிக்க ஆவல்கொண் டிருப்பதாகக் கூறினார்கள். காலமும் ஒருமணிக் கதிகமாகவே, காப்டன் உலகநாயகன் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு, அதற்குள் உலர்ந்து இருந்த தன் உடையை யணிந்துகொண்டு சுகவிலாசத்திற் குப் புறப்பட்டான்.

---

## 8-வது அத்தியாயம்.

கர்னல் குமரவேலும் பஞ்சநாதம் பிரபுவும்—கர்னலின் இழிவான நடக்கை—ஆனால் அளவுமீறிவிட்டான்—அவன் தீய எண்ணங் கள்—உலகநாயகனும் பிரபுவும்-உலகநாயகன் வேலையில் போய்ச் சேர்தல்—ஓர் அதிசயப்பிரயாணி.

---

கர்னல் குமரவேல் மனக் கலவரத்தோடேயே சுகவிலா சத்தை நோக்கிச் சென்றான் என்று முன்னமே கூறி னோம். அவன் அங்குச் சென்று குதிரையைவிட் டிறங்கும் போது மனதை யொருவாறு திடப்படுத்திக் கொண்டான். இவன் இன்னகாரணத்திற்கு வந்தா னென்பது பிரபுவுக்கு நன்றாய்த் தெரியும். அவன் பிரபுவைக் கண்டதும் வந்தன மளித்து "பிரபுவே! நான் வந்த காரணத்தைத் தாங்கள் அறிந்துகொண் டிருப்பீர்க ளென்று நான் நிச்சயமாகக் கூறுவேன்" என்றான்.

பிரபு:—"ஆகா, தடையின்றி, நீர் தொகைகொடுக்க வேண் டிய நாள் இன்ன தென்று குறித்தே வைத்திருக்கி றேன். அதைப் பைசல் செய்யவே இப்போது வந்தீ ரென்று தெரிகிறது." என்றார்.

கர்னல்:—பிரபுவே அவ்விஷயத்தைப் பற்றிப் பேசுமுன் நான் வரும்போது நடந்த ஒரு சங்கதியைக் கூற

விரும்புகிறேன். அது தாங்கள் அறியத்தக்க விஷயமே.

பிரபு கடுகடுப்பாகவே "என்ன சங்கதி அது? கூறும் பார்ப்போம்" என்ருர்.

**கர்னல்:**—"நான் எட்டிக்குடியிலிருந்து வந்துகொண் டிருந்தேன். தங்களுடைய இரொட்டிக் கிடங்கைக்கடந்து ஆற்ருேரமே கொஞ்ச தூரத்தில் வந்துகொண் டிருக்கையில் நான் ஒருபோதும் காணுத அத்தகைய அழகுடைய ஒரு பெண்ணைக் கண்டேன். அவள் கரிய கூந்தலையும் பவழம் போன்ற இதழையும் நித்திலத்தைத் தோற்கச்செய்யும் தந்த பந்தியையும் அன்னம் போன்ற நடையையும் உடையவள். தங்களுக்கு இச்செய்கைகள் வெறுப்பாக விருக்கலாகும். ஆனல் எங்களைப் போன்றவர்கள் அத்தகைய விஷயத்தில் கொஞ்சம் பிரிய முள்ளவர்களா யிருப்பதற்காக மன்னிக்கப்படக் கூடியவர்களே. நான் அப்பெண்ணைக் கண்டு இனிய மொழிகளைக் கூறியபோது அவள் இயற்கையாகிய நாணத்தாலும் சற்று பிகுசெய்ய வேண்டுமென்பதாலும் ஏதோ விருப்பமில்லாதவள் போல் நடித்தாள். நான் குதிரையினின் றிழிந்து அவளைப் பலவந்த மாகவேனும் ஒருமுறை யாலிங்கனம் செய்துகொள்ள வேண்டுமென்று கருதி அவளைப் பிடிக்க முயன்றேன். அச்சமயம் ஆற்றின் எதிர்க்கரையிலிருந்து நீரிற்குதித்து பாய்ந்துவந்த தங்கள் மருகனுகிய காப்டன் உலகநாயகன் என்னை ஒரு குத்தினுல் தரையில் வீழ்த்தினன். இவ்வுலகில் என்னைவிட அவனுக்கு அன்பான சிநேகன் வேருெருவனு மில்லையென்பது தாங்க ளறிந்த விஷயமே. ஆயினும் எத்

தகைய சந்தர்ப்ப மாயினும் கீழ் உத்தியோகஸ்தன் தன்மேல் உத்தியோகஸ்தனை யடிப்ப தெனின் அது சகிக்கத்தக்க செய்கை யல்லவென்பது தாங்களறிந் ததே. இத்தகைய குற்றத்திற்குத் தண்டிக்காமலிருக்க லாகாது. ஆயினும் தற்சமயம் தண்டனையாகத் தோன் றும் வண்ணம் உடனே உத்தியோகத்தில் வந்து சேரும்படி கட்டளை யிட்டேன். நான்கைந்து தினங் கள் கழித்து மன்னித்து விட்டேனென்று கூறித் தன் விடுமுறையை யனுபவிக்கச் செய்யலாகு மென்பது என் கருத்து. நான் இவ்வாறு செய்ததற்காகத் தாங் கள் ஆயாசமடைய மாட்டீர்களென்று நம்புகிறேன்'' என்றான்.

பிரபு;—என் மருகனை உமது அக்ரமமும் மிருகத்தனமு மாகிய செய்கையிலிருந்து அப்பெண்ணைக் காப்பாற்றி னான்? அப்பெண் கர்னல் இரகுநாதன் புத்திரியாகிய அமராவதியென்று தெரிகிறது.

கர்னல்:—தாங்கள் என்மேல் கோபிக்கவேண்டாம். என் போன்றவர்களுக்கு அத்தகைய செய்கை பழக்கமாய் விட்டிருப்பதால் அதற்காக எங்களை மன்னிக்கவேண் டும். அறிவில்லாக் கசடனாகிய பெரிய கட்சிக்கார னுக்கு இத்தகைய பெண்ணிருப்பது வெட்கக்கேடு.

பிரபு:—என் மருகன் எங்கே?

கர்னல்:—"காப்டென் உலகநாயகன் அப் பெண்ணோடு கூடவே மிக்க அன்போடு பேசிக்கொண்டு போகிறான். இருவரும் கை கோத்துக்கொண்டு இரொட்டிக்கிடங் கிற்குச் சென்றுகொண் டிருந்தார்கள். தங்கள் மரு கன் என் பிரியத்தைக்கெடுத்தது, தான் அச்சுகத்தை யனுபவிக்கவே'' என்றான்.

பிரபு இம்மொழிகளைக்கேட்டதே உள்ளத்தில் கோப மடைந்து சற்றுநேரம் சிந்தித்துப் பிறகு கர்னல் குமரவேலை நோக்கி,

"கர்னல், நீ செய்தது நியாயமே. மேல் அதிகாரியை யடித்தது பெரியகுற்றமே. ஆகையால் நான் உன்மேல் வருத்தமடையவில்லை. ஆனால் ஒன்று நீ கூறியபடி நான் ஐந்து நாட்கள் கழித்து அவனை மன்னிப்பதாய்க்கூறி விடு முறையை யனுபவிக்கும்படி யனுப்பவேண்டாம். அதற்கு மாறாக அவனை வேலையிலிருந்து விடுதலை செய்யவே வேண் டாம். ஒருநாள் விடுமுறைகூட அளிக்கவேண்டாம். ஒரு மணி நேரங்கூட வெளியில் விடவேண்டாம். இடையில் அவன் உன்னிடம் எப்படி நடந்துகொள்கிறான் என்பதை எனக்கு அறிவி. பணவிஷயம் இன்னும் மூன்று மாதம் தவணையிலிருக்கட்டும். அதன் முடிவில் என்னை வந்துபார்" என்றார்.

இம்மொழிகளைக் கேட்ட கர்னல் மிக்க வியப்படைந்து விட்டார். ஏனெனில் பிரபு தன்மேல் கோபித்துக்கொள் வார் என்று தான் எண்ணியதற்கு மாறாக, அவர் தன் மரு கன் மேலேயே கோபித்துக்கொண்டதும், அதோடு தன் கடனை யுடனே கொடுக்கும்படி கட்டாயப் படுத்தாமல் தனக்கு வாயிதாக் கொடுத்துவிட்டதும் அவனுக்கு மிக்க ஆச்சரியத்தை யளித்ததோடு சந்தோஷத்தையும் அளித் தது. பிரபுவின் கருத்தைத் தான் அறிந்துகொண்டதாகவும் அதுவே அவர் அவ்வாறு கூறியதற்குக் காரணம் என்றும் தனக்குள் ஊகித்துக்கொண்டான். அதாவது தன் மரு கன் கர்னல் இரகுநாதன் புத்திரியை ஒரு சமயம் மணம் செய்துகொள்வா னென்று பயந்தே அவர் இம்மாதிரி நடந் துகொண்டார் என்று எண்ணிக்கொண்டான். இதோடு

தான் வந்த காரியம் கெட்டுப்போகாமல் நிறைவேறியதே என்று அம்மட்டில் சந்தோஷமடையாமல் பிரபுவின் நட்பை யதிகமாகப் பெறவேண்டுமென்று ஆவல் கொண்டான்.

காப்டன் உலகநாயகனைப்பற்றித் தான் கூறிய சமாசாரம் உண்மையல்லவென்று அவன் அறிவான். தான் வேணுமென்றே, அவன் மிக்க அன்போடு அமராவதியின் கரத்தைப் பற்றிக்கொண்டு சென்றான் என்பது முதலிய பொய்களையும் சேர்த்துக் கூறியதால்தான் பிரபு தன் மருகன்மேல் கோபமுற்றுத் தனக்குச் சந்தோஷமுண்டாகும் வண்ணம் நடந்துகொண்டார் என்று அவன் கருதினான். ஆதலால் அதே வழியில் பிரபுவின் தயவை யதிகமாகச் சம்பாதித்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்தான்.

நேயர்களே! எப்போதும் அதிக ஆசை அதிக நஷ்டம். அதற்காகவே ஆன்றோர் "காணியாசை கோடி கேடு" என்று பழமொழி கூறியிருக்கின்றனர். கர்னல் குமரவேல் அதையுணராது, பிரபுவின் தயவை யதிகமாகப் பெறவிரும்பி அடியிற் கண்டபடி கூறத்தொடங்கினான்.

பிரபுவே! நான் தங்கள் விருப்பத்தின்படியே நடக்கச் சித்தமாக விருக்கிறேன். தாங்கள் என் செய்கைகளையும் நோக்கத்தையும் நியாயமானவை யென்று கருதியதற்காக வந்தனமளிக்கிறேன். நான் இதுமட்டுமல்ல. இன்னொரு விஷயம் செய்யக் கருதி யிருக்கிறேன். அதாவது நான் செல்லும் பாதையில் எங்கேனும் பதுங்கியிருந்து அப்பெண் வரும்போது சந்தித்து அவளுக்கு ஆசை மொழிகளைக் கூறி எப்படியாவது தந்திரமாக அவளை வசப்படுத்துகிறேன். இன்னும் அவளை மணம்புரிந்துகொள்வதாகக் கூறுகிறேன். ஆனால் நான் மணம்புரியும் ஆசாமியல்ல. எவ்வாற்றானும் அவள் கற்பை யபகரித்துக்கொண்டு, தங்கள்

மருகனுகிய காப்டன் உலகநாயகன் மறுபடி யவள்மேல் பிரியங்கொள்ளாத விதமாகச் செய்துவிடுகிறேன்'' என்றான்.

பிரபு மிக்க வெறுப்பும் கடுகடுப்புமான முகத்தோடு "கர்னல் குமரவேல்! நான் மறுபடி யோசித்ததில் எனக்கு நீ யளிக்கவேண்டிய முழுத்தொகையும் இப்போதே யெனக்கு அவசியம் வேண்டியதாகவிருக்கிறது. ஆகையால் உடனே பணத்தைக் கொடுத்துவிடவேண்டும்'' என்றார்.

இதைக் கேட்டதே கர்னல் குமரவேல் பேரிடி விழுந்தவன்போல் பிரமிப்படைந்தான். சற்று நேரத்திற்கு முன்பு பணம் கொடுக்கத் தவணை யளித்தவர் இதற்குள் எதனுல் இப்படி நேர்மாருகக் கூறிவிட்டார் என்று அவனுக்கு விளங்காமல் விகாரமடைந்த முகத்தோடு மிரள மிரள விழித்தான். அதற்குள் பிரபு,

"நான் என் பணத்தை யுன்னிடம் கொடுத்திருப்பது, நூறுதான் பெரிய கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் யோக்கியமான குடும்பிகளின் பெண்களை யக்கிரமமாகக் கற்பழிப்பதற்கென்று நீ நினைக்கிருய்?'' என்றார்.

**கர்னல்குமரவேல்:**—ஆ! தங்களுக்கு வெறுப்புண்டாகியதற்கு இதுவே காரணமாயின் நான் அந்த எண்ணத்தையே யடியோடு விட்டு விடுகிறேன். அப்பெண்ணைப்பற்றி நான் கருதுவதே யில்லை. இது சத்தியம். தங்களுக்கு அவ்விஷயத்தில் சற்றும் அய்யம் வேண்டாம்'' என்றான்.

பிரபு "இது நிச்சயமான நிபந்தனையாயின் பண விஷயம் முன் கூறியபடி மூன்று மாதம் கழிந்தபின்பே கொடுக்லாம்.'' என்றார்.

கர்னல் "தங்களுக்கு மிக்க நன்றியோடு வந்தன மளிக்கிறேன். தங்கள்விருப்பத்திற்கு மாருக நான் ஒருபோதும்

நடக்க மாட்டேன். இனி விடையளித்தால் நான் செல்கிறேன். இச்சந்தர்ப்பத்தில் தங்கள் மருகனை நான் இங்கு சந்திப்பது நன்றாயிராது" என்றான்.

பிரபு.—"இன்னொரு விஷயமட்டும் மறக்கவேண்டாம். காப்டன் உலகநாயகன் விஷயத்தில் நானே உம்மை இவ்வாறு நடந்துகொள்ளும்படி தூண்டியதாக அவன் அறியலாகாது. அதோடு நீர் எனக்குக் கடன் தரவேண்டிய சங்கதியே அவனுக்குத் தெரியாது. நான் அதைக் கூறமாட்டேன். அது அவனுக்குத் தெரியாமலிருப்பதே நலம்" என்றார்.

கர்னல் "நான் கூறமாட்டேன்" என்றான். பிரபு "பத்திரம் பத்திரம். ஒருமணி நேரம்கூட அவனை வெளியே விடவேண்டாம். நானே அதைப்பற்றித் தெரிவிக்கிறவரையில் அவன் சைனியத்தை விட்டு வெளி வரலாகாது. மூன்று மாதங்கள் கழிந்ததும் மறவாமல் என்னை வந்து காணும்" என்றார்.

கர்னல் குமரவேல் விடை பெற்றுச்சென்றான். பிரபு அவனைத்தாகத்திற் கருந்தும்படி கூட உபசரிக்க வில்லை. அதைப்பற்றி யவனுக்கு அவசியமே யில்லை. கடன் கொடுக்கத்தவணை யகப்பட்டதே அவனுக்கு வேண்டிய முக்கிய விஷயம். அமராவதியின் விஷயத்தில் இனித் தான் பிரவேசிப்பதில்லையென்று கர்னல் கூறினனல்லவா. அந்த வாக்குப்படி நடக்க அவன் கருதவில்லை. நாய்வாலை என்ன நிமிர்த்தினும் அதன் கோணல் நீங்காது. அதுபோல் துஷ்டர்களுக்கு எவ்வளவு நற்புத்திகளைக் கூறினும் அவர்கள் துஷ்டகுணம் நீங்குவது மிக்க கஷ்டம். கர்னல் குமரவேல் ஸ்திரீலோலன். கபடற்ற கன்னியர்களின் கற்பை யழிப்பது அவனுக்கு ஒரு விளையாட்டுப்போன்ற வேலை. அதில் மிக்க பழக்க முடை

யவன். அத்தகைய அயோக்கியர்கள் ஸ்திரீகளிடம் கற்பு என்ற ஒரு குணமிருக்கிறது என்பதையே நம்புவதில்லை. அதோடு இத்தகைய நடக்கைகளில் ஜெயம் பெற்றால் அதை யொரு பெரும் புகழ்ச்சிக்குரிய செய்கையாகத் தன் நண் பர்களிடம் கூறிக்கொள்வது அத்தகையோர்க்கு வழக்கம்.

குமரவேலுக்குப் பெரியகட்சியார்மேல் கொடிய பகை யுண்டு. ஆதலால் கர்னல் இரகுநாதன் புத்திரிக்கு இத் தகைய தீங்கு செய்தால் அதன்மூலமாக அவர்மேல் வஞ்சந் தீர்த்துக்கொள்ளலாம் என்பது அவனுடைய ஒரு எண் ணம். இதோடு உலகநாயகன் தனக்குண்டாக்கின அவ மானம் அவன் மனதில் கொழுந்துவிட் டெரிந்துகொண் டிருந்தது. உலகநாயகனை உடனே வேலையில் வந்து சேரும் படி கட்டளையிட்டதே ஒருவித தண்டனையாகும். அதற்கு மேல் வெறொன்றும் செய்ய முடியாது. அவனும் அமரா வதியும் அன்போடு கைகோத்துப் பேசிக்கொண்டு சென் றார்களென்று தான் கூறியது பொய்யாயினும் இப்போது அது உண்மையாக விருக்கலாகுமென்று அவனுக்கு அய்ய முண்டாயிற்று. ஆகவே அன்று நடந்த சம்பவத்தால் அக் கன்னிகைக்கு அவன்மேல் அன்புண்டாகலாகும் என்று அனுபவத்தால் குமரவேல் அறிவான். ஆகையால் தான் கருதியபடி அவனுக்குத் தீங்கிழைத்தால் உலகநாயகன் மேலும் வஞ்சம் தீர்த்துக்கொண்டதாகும். அவன் மனம் முறிந்து, அவன் அவளை மணம் செய்ய முடியாது போம். இத்தகைய அநீத எண்ணங்களால் அக்கன்னிகையை யெவ் வித மேனும் ஏமாற்றி வஞ்சிப்பதே சரி யென்று தீர்மானித் துக்கொண்டான். ஆனால் அச்சமயம் அதற்காக ஒரு முயற்சி யும் செய்யாமல், எவ்வாறு அந்த எண்ணத்தை நிறை வேற்றுவ தென்பதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டே நேராய் எட்டிக் குடிக்குச் சென்றான்.

உலகநாயகன் இரொட்டிக்கிடங்கிலிருந்து சுகவிலாசத்திற்கு வந்ததும் தூண்டில் முதலிய கருவிகளை யெல்லாம் வைத்து விட்டுத் தன் மாமன் இருக்கும் அறைக்குச்சென்று அவரைக்கண்டு கர்னல் குமரவேல் நடக்கையையும், தான் அவனைக் குத்தியதையும், தன்னை யுடனே வேலையில் வந்து சேரும்படி அவன் கட்டளை யிட்டதையும், யாவும் நடந்தது நடந்தபடி கூறினன்.

பிரபு:—"கர்னலே எல்லாச் சங்கதிகளையும் என்னிடம் கூறினார். நான் உனக்காக எவ்வளவோ கேட்டுக்கொண்டேன். அவர் ஒரே பிடிவாதமாக இருக்கிருர். அவர் நம்மைக் காணவே, விசேஷமாக உன்னைக் காணவே வந்துகொண் டிருந்தார். அதனல் மிக்க கோபமடைந்தார்" என்ருர்.

உலகநாயகன்:—"மாமா! அவர் என் நடக்கைக்காக என் மேல் கோபித்துக்கொள்வதை விடத் தன் நடக்கைக்காக மிக்க வெட்கமடைந்திருக்க வேண்டும். அப்பெண் ஒரு மிக்க ஏழையின் மகளாக இருந்திருந்தாலும் நான் அவ்வாறே தான் நடந்துகொண் டிருப்பேன்" என்ருன்.

பிரபு:—"சந்தேக மின்றி. அவன் நடக்கை மிக்க அக்கிரமமானதே. நீ செய்தது நியாயமே ஆயினும் அவன் உன் மேலதிகாரி. அவன் கட்டளைக்கு மீறி நடக்கலாகாது. ஆகையால் நீ போய் வேலையில் சேர்ந்துவிடு. ஒரு வாரங் கழித்து நான் அந்தக் கர்னலுக்கு ஒரு கடிதம் எழுதி..." என்பதற்குள்,

உலகநாயகன் ஆத்திரத்தோடு "எனக்காக மன்னிக்கும்படி அவனுக்குத் தாங்கள் ஒன்றுமே எழுத வேண்டாம். அவனுக்கே அறிவு உதித்து நியாயமாக நடந்து கொள்ளட்

டும். எனக்காகத் தாங்கள் அவனைக் கேட்டுக்கொண்டதற்கு மிக்க வந்தன மளிக்கிறேன். ஆனால் தாங்கள் கேட்டதற்கு அவன் மறுத்தது அவமரியாதை...'' என்ற போது,

**பிரபு:**—''நீ அவனோடு சண்டைக்கு இடங் கொடுத்து விடாதே; இதோ இந்தப் பணப்பையை யெடுத்துக்கொண்டு போய் உன் செலவிற்கு வைத்துக்கொள்'' என்று எழுந்து சென்று பெட்டியைத் திறந்து சவரன்கள் நிறைந்த ஒருபையை யவனிடம் அளித்தார்.

காப்டன் அதைப்பெற்றுக்கொண்டு அவருக்கு வந்தன மளித்துச்சென்று போஜனம் செய்து விட்டு ஒரு மணி நேரத்திற்குள் மாளிகையை விட்டு எட்டிக்குடிக்குப் புறப்பட்டான்.

* * * * *

* * * *

இலவணபுரி நகரத்தில் ஜன சஞ்சாரம் அதிகமாக இல்லாத பாகத்தில் ஒரு நெருக்கமான வீதியில் ஒரு புராதனமான கட்டிடம் இருக்கிறது. அதன் முன்னே பழைய உடைகள் விற்கு மிடம் என்று எழுதப்பட்ட ஒரு பலகை தொங்கிக்கொண்டிருந்தது. அவ்வீட்டில் புருடன் மனைவியாகிய இருவர் ஒரு கடை வைத்திருக்கிறார்கள். அதில் சகல விதமான பழைய உடைகளும் விற்கும். அக்காலத்திய உடைகளும், முற்கால உடைகளும், ஏழையாகிய தோட்டி முதல் இராஜகுமாரன் வரையில் அணியத்தக்க உடைகள், வர்த்தகர், உத்தியோகஸ்தர், இராணுவத்தில் உத்தியோகம் செய்வோர், அன்னிய நாட்டு மனிதரைப் போல் உடையணிந்து உருமாறப் பிரியமுடையோர், முகமூடி யணிந்து மாறுவேடமாய் விருந்திற்குச்செல்வோர் முதலியோர் போட்டுக்கொள்ளும் பலவித வேடங்களுக்கும் அவசியமான உடை

கள், ஆபரணங்கள், கத்தி முதலிய ஆயுதங்கள், அந்தந்த நாட்டுத் தலையணிகள், பாதரட்சைகள், கைக்கோல்கள் முதலியவைகளும் அந்தஸ்திற்குத் தக்கபடி அங்கு விற்கப் படும். வரிசை வரிசையாகச் சுவர்களின் ஓரங்களில் பலவித அளவுகளின்படி உடைகள் தொங்க விடப்பட்டிருக்கும்.

ஒருநாள் இரவு ஒன்பதுமணியாயிற்று. அப்போது தான் கணவனும் மனைவியும் கடையை மூடிக்கொண்டு தங் கள் வீட்டிற்குச் செல்வதற்காக ஆயத்தப்படுகிறார்கள். அச் சமயம் ஒரு மனிதன் குதிரைமேல் ஏறிக்கொண்டு வந்து கடையின் எதிரில் நின்று குதிரையைவிட் டிழிந்து கடைக் குள் சென்று நல்ல உயர்தரக் குதிரை வீரருக்குரிய உடை கள் முதலியவை இவ்விடத்தில் கிடைக்குமல்லவா என்றான்.

வந்த மனிதன் ஏறிக்கொண்டு வந்த குதிரை நல்ல விலையுள்ள குதிரையே. ஆனால் அம்மனிதன் உடைகள் விலை மதிக்கத்தக்கவை யல்ல. மேலும் பிரயாணத்தால் அவை மாசுபடிந்து இருந்தன. அம்மனிதனுக்கு வயது சுமார் நாற்பத்தைந்து நாற்பத்தாறு இருக்கும். அவன் முகம் உஷ்ணபூமியில் நெடுநாள் இருந்தவன் முகம்போல் நிறம் மாறிக்காணப்பட்டது. ஆனால் அவன் பலம் பொருந்திய தேகமும் அழகுவாய்ந்த முகமு முடையவன். அவன் கண் கள் மிக்க பிரகாசம் பொருந்தியவை. மொத்தத்தில் அவன் ஏதோ உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவன்போல் அல்லது இருந்தவன் போலவே புலப்பட்டான்.

அவனைக் கண்ட கடைக்காரனுக்கும் அவன் மனைவிக் கும் ஒருவித பீதியுண்டாயிற்று. ஏனெனில் அவனுடைய உயரமான பலம் பொருந்திய உருவத்தையும், அவன் அங்கு வந்த அகாலத்தையும் நோக்கியபோது அவர்களுக்குள் ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அவன் வழிப் பறி கொள்ளைக்

காரனே என்று அவர்கள் பீதி யடைந்தார்கள். அக்காலத்தில் அந்நாட்டில் அத்தகையோர் அதிகம். நடுப்பகலிலும் அத்தகைய களவு நடப்பதுண்டு. ஆகையால் இரவு வேளையில், ஜன சஞ்சாரமில்லாத வீதியில் நம்மிருவரையும் இவன் எங்கே கொன்றுவிடுவானோவென்று அவர்கள் பீதியடைந்தார்கள். ஆனால் அவனிடம் கத்தியில்லாததையும் அவன் குதிரையின் சேணப்பையில் கைத்துப்பாக்கிகள் சொருகியில்லாததையும் கண்டு சற்று தைரிய மடைந்தார்கள். எனினும் அவன் கொள்ளைக்காரன் என்ற சந்தேகம் மட்டும் ஒழியவில்லை.

வந்திருந்த மனிதன் மிக்க உலக அனுபவமுடையவனாகையால் இவர்கள் மனதிலிருந்த எண்ணத்தை எப்படியோ அறிந்துகொண்டு "கடைக்காரரே! நீங்கள் என்னைக்கொள்ளைக்காரன் என்று எண்ணிப் பீதியடைகிறீர்கள். அப்படி எண்ண வேண்டாம்; ஆனால்......இதோ உங்களிடம் வாங்கும் பொருள்களின் விலையை நான் கொடுத்துவிடுவேன்" என்று கூறிக்கொண்டே தன் உட்ஜேபியிலிருந்து ஒரு பணப்பையை யெடுத்து அங்கிருந்த மேஜைமேல் எறிந்தான். அதைக்கண்டதே கடைக்காரருக்குத் திருப்தியாய்விட்டது. ஆயினும் இவன் கொள்ளைக்காரன் என்ற சந்தேகம் மட்டும் நீங்கவில்லை.

கடைக்காரன் "வாருங்கள்! தங்களுக்கு வேண்டிய சாமான்களைக் காட்டுங்கள்" என்று கூறிக்கொண்டே தன் மனைவிக்குப் பயப்படவேண்டாமென்று ஜாடையாகச் சமிக்கை செய்தான். அதன்மேல் வந்தமனிதன் அக்காலத்தில் அரசனுடைய குதிரைப் படைகளிலுள்ள உயர்தர உத்தியோகஸ்தர் அணியும் உயர்ந்த உடைகளில் இரண்டு ஜதை உடைகளும் அவற்றிற்குத்தக்க மற்றவைகளையும்

தேர்ந்தெடுத்துக்கொண்டு ஒரு உடைவாளையும் எடுத்து வைத்து இவற்றின் கிரயம் என்ன ஆகிறது என்று வினவினன். கடைக்காரன் தொகையைக் கூறினதே அம்மனிதன் "ஆ! இன்னும் மீதியிருக்கிறது. உன்னிடம் மோதிரங்கள், கடிகாரம், சங்கிலி முதலியவைகளிருந்தால் காட்டு பார்ப்போம்" என்றான்.

அத்தகைய விலையுயர்ந்த வஸ்துக்களைக் காட்டினல் இவன் ஒரு சமயம் நம்மைக்கொன்றுவிட்டு அவற்றை யெடுத்துக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வதென்று கடைக்காரனும் அவன் மனைவியும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து மயங்கினர்கள். வந்த மனிதன் "ஓகோ! அந்தக் கொள்ளைக்காரன் என்ற பித்தம் இன்னும் உங்களை விடவில்லை போல் காண்கிறது. நான் அத்தகைய ஆளல்ல. வீண் கலவரம் வேண்டாம். நான் பிறந்து வளர்ந்த இவ் வூரைவிட்டுச்சென்று நெடுநாட்களாயின. இலக்ஷ்மி கொஞ்சக் காலமாக என்மேல் மிக்க கோபம் செய்துகொண்டிருக்கிறாள். அதனல் மனிதர்களும் எனக்கு அக்கிரமமாகத் துரோகமும் தீங்கும் செய்யத் தொடங்கினர்கள். அவ்வளவே சங்கதி. இதோ என் கத்தியை மேஜைமேல் வைத்துவிட்டேன். நீ அதை யெடுத்து உருவிக் கையில் ஆயத்தமாக வைத்துக்கொண்டிரு. அப்படி நான் உன் பொருள்களை யபகரிக்க முயன்றால் உடனே என்னை வெட்டிவிடு, வீண்கலக்கம் வைத்துக்கொள்ள வேண்டாம்" என்றான்.

கடைக்காரன் மறுபடி தைரியமடைந்து மேல் மெத்தைக்கு ஏறிச்சென்று ஒரு பெட்டியை யெடுத்துக்கொண்டு வந்து அதிலிருந்த கடிகாரங்கள் மோதிரங்கள் முதலியவற்றை யெடுத்துக்காட்டினன். வந்த மனிதன் இரண்டு

மோதிரங்களையும் ஒரு பொன் கடிகாரத்தையும் எடுத்துக் கொண்டு அவற்றிற்குக் கடைக்காரன் கேட்ட விலையையும் மற்றவற்றின் கிரயத்தையும் கொடுத்துவிட்டான். பிறகு அங்கிருந்த வேலையாளுக்கு அரைச் சவரன் கொடுத்துவிட்டுக் கடைக்காரனை நோக்கி, "நான் நகரத்தை விட்டுச்சென்ற பின் இது முழுதும் மாறுபட்ட நகரமாக விருக்கிறது. எனக்கு எங்கெங்கே யெதெது இருக்கிறதென்று தெரிய வில்லை. ஆகையால் இங்கு முதல்தரக் குதிரைப்படை யுத்தியோகஸ்தர்களும் மேல் அந்தஸ்திலுள்ளவர்களும் வரப் போக விருக்கும் முதல்தரமான ஹோட்டல் எதுவென்று எனக்குத் தெரிவிக்கக் கோருகிறேன். நீங்கள் இன்னும் நான் கள்ளன் என்று நினைத்துக்கொண்டிருக்கவேண்டாம். நீங்கள் எவ்வளவு மரியாதையான ஹோட்டலைக் கூறினாலும் என்னால் உங்களுக்கு எவ்வித அகௌரவமும் உண்டாகாது" என்றான்.

ஹோட்டல்காரன்:—"நீர் யாராயிருந்தாலும் சரி. சௌக்கு வீதியிலுள்ள 'காமதேனு' என்ற ஹோட்டல்தான் தாங்கள் கோரியபடி சைனிய உத்தியோகஸ்தர்களும் உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்களும் தங்கும் ஹோட்டல். அங்கு சென்றால் முதல் தரமான ஆகாரம், நல்ல அலங்காரம் செய்யப்பட்ட அறை, மிருதுவான படுக்கை, நல்ல அந்தஸ்திலுள்ள மனிதர் மனதிற்குச் சந்தோஷத்தை யுண்டாக்கும் கேளிக்கை, சங்கீதம், விளையாட்டுகள், பந்தயங்கள் யாவும் பூரணமாகக் கிடைக்கும்" என்றான்.

வந்த மனிதன்:—" நண்பனே ! நீ செய்த வுதவிக்காக நான் மிக்க வந்தன மளிக்கிறேன். ஆனால் உங்கள் மனதில் இன்னும் கள்ளன் பயம் புகுந்துகொண்டே யிருக்

கிறது. ஆகையால் என்னை யந்த ஹோட்டலுக் கனுப்பிவிட்டு இவன் கொள்ளைக்காரன்போல் இருக் கிறது என்று அவர்களுக்கு இரகசியமாகச் சங்கதி யனுப்பிவிடவேண்டாம். அப்படிச் செய்தால் நீங்கள் அகாரணமாக ஒரு நிரபராதிக்குப் பெருந்தீங்கு செய்த பாதகத்தை யடைவீர்கள். ஏனெனில் உண்மையில் நான் அப்படிப்பட்டவனல்ல. இனிப் போய் வரு கிறேன்" என்று கூறிவிட்டுச் செல்லுகிறான்.

---

## 9-வது அத்தியாயம்.

காமதேனு ஹோட்டலில் நடக்கும் சம்பவங்கள்—சூதாட்டத்தில் கர்னல் குமரவேலின் ஜெயம்—ஹோட்டலில் அதிசயப் பிராணி—ஜெயம் மாறுகிறது—கர்னல் குமரவேலின் திண்டாட்டம்—சூதின் கொடுமை—காப்டேன் உத்தண்டி.

---

நமது உலகநாயகனுக்கும் கர்னல் குமர வேலுக்கும் மனஸ்தாபம் நேர்ந்த நான்காவது நாள் இரவு சுமார் பதினொரு மணியிருக்கும். அவ்வேளையில் 'காமதேனு' என்ற ஹோட்டலின் ஒரு பெரிய அறையில் அனேகர் கூட்டமாக விருந்தார்கள். அந்த அறை மிக்க நேர்த்தியாக அலங்காரம் செய்யப்பட்டு ஒரு இராஜ மாளிகைபோ லிருந் தது. அங்கு சொக்கட்டான், சீட்டாட்டம் முதலிய பல விதச் சூதாட்டங்கள் நடப்பதற்கு வேண்டிய வசதிகளைத் தும் மிக்க நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தன. வெளிப் பார்வைக்கு நாகரீகமும் நாணயமும் கொஞ்சமேனும் செல் வமும் அந்தஸ்து முடையவர்களாகக் காணப்படுவோர் களே அங்கு வருவது வழக்கம். நல்ல அந்தஸ்திலுள்ள ஆடவர்களே யன்றி மாதர்களும் அங்கு வந்து, சூதாட்டம்

குடி முதலியவைகளில் இரவைக் கழிப்பார்கள். நேயர்களே! எத்தகைய அந்தஸ்திலிருந்தாலும், செல்வத்திலிருந்தாலும், நல்ல யோக்கியதையுடைய மாதர்களாயின் அத்தகைய விடத்திற்கு வருவார்களாவென்பதை நீங்களே சிந்தித்துக்கொள்ளலாம். அக்காலத்தில் அந்நாட்டில் அத்தகைய நடக்கைகளும் நாகரீக நடக்கைகளென்றே மதிக்கப்பட்டிருந்தன.

அந்த அறையின் ஒரு பக்கத்தில் ஒரு பெரிய மேஜை மேல் பலவிதப் பலகார வகைகளும், ஆகாரவகைகளும் ஒயின் முதலிய குடிவகைகளும் வைக்கப்பட்டிருந்தன. அங்கு விளையாடிக்கொண்டிருப்பவர்களில் பிரியமானவர்கள் அப்போதைக்கப்போது உணவு முதலியவைகளை யருந்துவார்கள். அங்கு ஒரு மேஜையைச் சூழ்ந்து ஐந்தாறு இராணுவ உத்தியோகஸ்தர்கள் உட்கார்ந்துகொண்டு பாச்சிகை யுருட்டிச் சூதாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் கர்னல் குமரவேல் பிரதானமானவன். மற்ற பேர்களும் பல படைகளிலிருக்கும் காப்டென், மேஜர் முதலிய வாலிப உத்தியோகஸ்தர்களே. அன்று கர்னல் குமரவேலுக்கு ஆரம்பத்திலிருந்து ஜயமே. அவன் ஐந்தாறு சவரன்களே கொண்டுவந்திருந்தான். பதினோரு மணிக்குள் அவன் எதிரில் ஆயிரத்து ஐந்நூறு சவரன்கள் வரையில் குவிந்துவிட்டன. அவன் கூட ஆடத் தொடங்கியவர்களில் சிலர் தங்களிடமிருந்த பணம் முழுமையும் தோற்றுவிட்டு எட்டச் சென்று உட்கார்ந்து கொண்டார்கள். சிலர் ஒரு அளவிற்கு மேல் ஆடலாகாதென்று நின்றுவிட்டார்கள். சிலர் இன்று இவனுக்கே அதிஷ்ட காலமாக விருப்பதால் நாம் இவனோடு இன்னும் ஆடலாகாதென்று நின்று விட்டார்கள்.

கர்னல் குமரவேல் அங்கிருந்தவர்களை யெல்லாம் ஒவ்

வொருவராய்த் தன்னோடு ஆடவரும்படி யழைத்தான். ஒருவன் "போதும் என்னுடைய புது சவரன்கள் மூந்நூறு உன்னிடம் வந்து சேர்ந்துவிட்டன. இன்று அவ்வளவுபோதும்" என்றான்.

இன்னொருவன்:—"நான் ஒரு அளவு வரையில் தான் எப்போதும் ஆடுவது. அதை மீறிப்போகமாட்டேன்" என்றான்.

இன்னொருவன் "அப்பா! போதும். உனக்கு மிக்க வந்தனம். கடந்த வருடம் அரண்மனையைப் போன்ற ஒரு பெரிய மாளிகையை யிந்தச் சூதாட்டத்தில் ஒழித்துவிட்டேன். இவ்வருடம் ஒரு பெரிய தோட்டம் ஒழிந்தது. இவ்வாறே போய்க்கொண்டிருந்தால் கடைசியில் பட்டாளத்தில் எனக்குக் கிடைத்திருக்கும் காப்டென் உத்தியோகத்தைத்தான் அடகு வைக்கவேண்டிவரும்" என்றான்.

மற்றொருவன் "கர்னல் குமரவேல்! இன்று குருட்டதிஷ்டம் உன் பக்கத்திலிருக்கிறது. நான் ஒருபோதும் உன்னோடு இன்னும் ஆடமாட்டேன்" என்றான்.

கடைசியாக விருந்தவன் "நான் இனி யிந்தச் சூதாட்டம் ஆடுவதேயில்லையென்று சத்தியம் செய்து கொண்டேன்" என்றான்.

கர்னல் குமரவேலுக்கு அன்று ஆரம்பத்திலிருந்து ஜயமே யுண்டாகவே அவன் ஆசை யதிகமாகி வெறியேறியவன்போல் இன்னும் பந்தயம் வைக்கத் தக்கவர்கள் யாராவது முன் வரமாட்டார்களா என்று ஒவ்வொருவரையும் கூப்பிட்டுப் பார்த்தான். ஒருவரும் ஒப்பவில்லை. கடைசியில் அவன் யாவரையும் நோக்கி,

"இதென்ன இன்று? சாதரணமாகச் சூரியன் உதயமாகுமட்டும் ஆடுகிற நீங்கள் இன்று ஏன் சரியாய்ப் பதி

ஞேருமணி யாவதற்குள்ளேயே சோர்ந்து கோழையாய் விட்டீர்கள்? என்னோடு இரண்டொரு சவரன் பந்தையம் கட்டத்தக்கவர்கள் ஒருவருமில்லையா?'' என்று கெட்டியாய்க்கேட்டான்.

அதே நிமிடம் "நான் கட்டுகிறேன்'' என்று கூறிக் கொண்டே யொருமனிதன் அறைக்குள் வந்தான். அம் மனிதனைப்பற்றி நாம் விவரித்துக்கூறவேண்டியதில்லை. நமது நண்பர்கள் அவனைப்பற்றி முன்னமே யறிந்திருக்கிறார்கள். பழைய உடைகள் விற்கும் கடையில் உடைகள் முதலியவை வாங்கி யணிந்துகொண்டு சென்றவனும் கடைக்காரர்களால் கள்ளனென்று சந்தேகிக்கப் பட்டவனுமாகிய அம்மனிதனே இங்கு வந்தவன்.

சூதாடுமிடத்திலிருந்தவர்களில் ஒருவர்க்கேனும் அவன் யாரென்று தெரியவில்லை. அவன் அனைவர்க்கும் புதுமனிதனாக விருக்கிறான். அவன் உடை முதலியவைகளால் அவன் தங்களைப்போன்ற அந்தஸ்துடையவனாகவே யிருக்க வேண்டுமென்று அவர்கள் கருதினார்கள். அவனுடைய கம்பீரத்தோற்றத்தால் அவனை யொருவரும் தங்களிற்றாழ்ந்தவனென்று கருத விடமில்லை. அவன் மிக்க அலக்ஷியமாகவே நான் பந்தயம் வைக்கிறேன் என்று கூறிக் கொண்டே யுள்ளே வந்து கர்னல் குமரவேலின் எதிரில் உட்கார்ந்தான். யாவரும் வியப்போடு அவனையே நோக்கினார்கள். அவன் முதலில் மூன்று சவரன் வைத்தான். பாச்சிகையை யுருட்டியதே அவனுக்கே ஜெயமாய்விட்டது. பிறகு அவன் ஆறு சவரன் என்றான். கர்னல் சரியென்றான்.

**புதுமனிதன்:**—ஆ என்னுடையதே. இதோ பனிரெண்டு சவரன்களும் அப்படியே.

கர்னல்:—சரி.

புதுமனிதன்:—என்னுடையதே இதோ இருப்த்தி நான்கு சவரன்கள்.

கர்னல்:—சரி.

மறுபடி பந்தயங் கட்ட அதையும் அம்மனிதன் என்னுடையதே யென்று அதையும் ஜெயித்துக்கொண்டான்.

இவ்வாறே அவன் ஒவ்வொரு முறையும் தொகையை யிரட்டித்துக்கொண்டே ஒவ்வொரு முறையும் ஜெயமடைந்து வந்தான். கர்னலின் எதிரிலிருந்த சவரன்களின் குவியல் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறையப் புதுமனிதன் எதிரில் குவியல் பெருகிக்கொண்டே வரத்தொடங்கியது. அம்மனிதனோ இவ்வளவு ஜெயமடைந்தும் கொஞ்சமேனும் மனத்துடிப்பாவது, ஆவலாவது, சந்தோஷமாவது, அதிசயமாவது காட்டாமல் ஏதோ புளியங்கொட்டைகளை விளையாட்டிற்குப் பந்தயமாக வைத்து ஆடுபவன் போல் மிக்க அலக்ஷியமாகவே சவரன் குவியல்களைத் தன் பக்கமாகத்தள்ளிக் கொண்டே வந்தான்.

அங்குள்ள யாவர்க்கும் ஓகோ கர்னல் குமரவேலின் அதிஷ்டவேளை தலை கீழாக மாறிவருகிறது என்று புலப்பட்டதும், யாவரும் ஆடுகிறவர்களிடம் வந்து சூழ்ந்து கொண்டார்கள். சீட்டாட்டம் முதலிய வேறு ஆட்டங்களை யாடுவோரும் அவற்றை நிறுத்தி விட்டு இவர்களிடமே வந்து சூழ்ந்து கொண்டு இவர்கள் ஆட்டம் எப்படி முடிகிறது பார்ப்போமென்று கவனிக்கத்தொடங்கினார்கள்.

தன்னெதிரிலிருந்த குவியல் குறையக்குறையக் கர்னல் குமரவேலின் முகம் வேறுபடத் தொடங்கியது. மன எரிச்சல் உதித்தது. ஆயினும் எத்தகைய கலக்கத்தையும் அடக்கிக் கெண்டு தைரியத்தோடு நஷ்டத்தை இலட்சியம் செய்

யாதவன் போலவே சற்றும் பின்வாங்காமல் புது மனிதன் கேட்கிறபடி பந்தயம் கட்டிக்கொண்டே வந்தான். வரவர அவன் மனோவேதனை யதிகமாயிற்று. கடைசியில் மணி பனிரண்டடிக்கும் சமயம் அவன் எதிரிலிருந்த கடைசி சவரனும் புது மனிதனிடம் போய் சேர்ந்து விட்டது. கர்னல் குமரப்பன் நெஞ்சு உலர்ந்து விட்டது. அவனுக்கொருவிதப் பிரமையும் திகிலு முண்டாயின. இரண்டொரு வினடியே திகைத்து விழித்தான். மறு வினடி அப்புது மனிதனை நோக்கி, "என் கடிகாரத்திற்கும் உன் கடிகாரத்திற்கும்" என்றான். புது மனிதன் அதற்கு அலட்சியமாகவே "சரி, எதுவோ வொன்று" என்று கூறிப் பாச்சிகையை யுருட்டி அதையும் ஜயித்துக்கொண்டான்.

**கர்னல் குமரவேல்:**—"என் மோதிரங்களுக்கும் உன் மோதிரங்களுக்கும் பந்தயம். யாருடையவை அதிக விலை பெறுவதானாலும் சரி. அதிஷ்டானு சாரம்" என்றான்.

புது மனிதன் அதற்கும் தலை யசைத்துக் கர்னலின் மோதிரங்களையும் ஜெயித்துக்கொண்டான். கர்னல் தன் நண்பரில் ஒருவனாகிய காப்டென் கமலநாதனை நோக்கி "நண்பனே! ஒரு நூறு பவுன் கடனாகக்கொடு" என்றான். அந்தக் காப்டன் நிதானமாக "நண்பரே! உமது நிலைமை யிப்போது வெளிப்படையாகத் தெரிந்தே யிருக்கிறது. உம்மிடம் ஒரு காசாவது இல்லை. இனி யுமது கர்னல் பதவியைத்தான் பந்தயமாக வைக்க வேண்டும்" என்றான். கர்னல் குமரவேல் கோபத்தால் மேஜையைத் தட்டினான். அவன் பன்முறை சூதாட்டத்தில் பணத்தைத் தோற்று விட்டுப் பலவிடங்களில் கடன் வாங்கி அவதிப்பட்டிருக்கிறான். ஆயினும் அந்தப்பைத்தியம் அவனை விட்டதல்ல.

மனதில் பெருந்திகிலும் கோபமும் துயரமும் நிறைந்திருந்த போதிலும் பல்லைக்கடித்துக்கொண்டு "சரி என் உத்தியோகத்தையே பந்தயம் வைக்கிறேன்'' என்றான்.

புது மனிதன் அதற்கும் அலட்சியமாகவே "சரி காலம் போக்கிறது எதுவோ ஒன்று'' என்றான். அவனுடைய சாந்தத்தையும் அலட்சியத்தையும் கண்ட அங்குள்ள ஆட்கள் மிக்க வியப்படைந்து, "அடடா! இவன் எப்படிப்பட்ட ஆளாயிருக்கவேண்டும். இவ்வளவு தொகையையும் ஜெயித்துக்கொண்டு அது போதாதென்று கர்னலின் கடிகாரம் மோதிரங்கள் யாவற்றையும் ஜெயித்துக்கொண்டு அது போதாதென்று அவன் உத்தியோகத்தையே பந்தயம் வைக்கிறேனென்றால் அதை யொரு துரும்பாய் மதிக்கிறானே. இவன் சூதாட்டத்திலேயே முழுகி எழுந்தவன் போலும்'' என்று கருதி, அவனை வியப்போடு நோக்கித் "தாங்கள் எப்போதும் இப்படிப் பெருந்தொகை வைத்து ஆடுவது வழக்கமோ ?'' என்றார்கள்.

அம்மனிதன்:—"இல்லை யில்லை. நான் சூதாடத்தொடங்கியது இதுவே முதன் முறை'' என்றான்.

இதைக் கேட்டதே அங்குள்ளவர்களுக்குப் பின்னும் அதிக வியப்பாய் விட்டது. இப்போது தான் முதல் முதல் சூதாடுபவனாயின் இப்படி யெங்கேனு மாடுவானோ வென்று வியப்போடு அவனையுற்று நோக்கினார்கள்.

புது மனிதன் அவர்களை நோக்கி, "நான் இந்த நாட்டானே யெனினும் நெடுநாட்களாக அன்னிய நாடுகளில் அன்னிய ஜாதி மனிதர்கள் கூட வசித்துக்கொண் டிருந்தேன். நான் அங்கு செய்துகொண் டிருந்த தொழிலிலும், அங்கு பெற்றிருந்த சகவாசங்களிலும் சூதாட்டத்தைக்

காணவில்லை. ஆகையால் நான் கூறுவது உண்மையே. இது தான் நான் முதன் முறையாகச் சூதாடியது" என்றான்.

அங்குள்ளவர்கள் "அப்படி யாயின் நீர் இங்கு வந்து ஆடத்தொடங்கிய போது இவ்வளவு தூரம் ஆடுவதாக உத்தேசமோ?" என்றார்கள்.

**அம்மனிதன்:**—"ஒன்றைப்பற்றியும் நான் யோசிக்கவே யில்லை. அது எப்படி முடியுமென்று நான் கவனிக்கவேயில்லை. இப்போதும் கவனிக்க வில்லை." என்று புன்னகை புரிந்து கொண்டே கூறினான்.

கர்னல் குமரவேல் ஹோட்டல் ஆளை யழைத்துக் கடிதம் பேனா மசிப்புட்டி கொண்டு வரும்படி கூறி விட்டு எழுந்து போய் ஒரு கிண்ணத்தினிறையச் சாராயம் விட்டுக் குடித்தான். வேலைக்காரன் அவ்வாறே யாவும் கொண்டு வந்த போது கர்னல் அம்மனிதனை நோக்கி,

"இப்போது நான் தோற்று விட்டால் என் உத்தியோகத்தை இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் உனக்களித்து விடுவதாய் எழுதிக்கொடுக்கிறேன். இதோ இவர்கள் யாவருமே அதற்குச்சாட்சி. இப்போது நான் உம்மிடம் தோற்று விட்டிருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் ஈடாக என் உத்தியோகத்தைப் பந்தயம் வைக்கிறேன்" என்றான்.

**அம்மனிதன்:**—"சரி அப்படியே யிருக்கட்டும். இதோ நான் கெலித்த எல்லா சவரன்களும் நகைகள் முதலிய யாவும் இவற்றில் ஒன்று கூட நான் தொடவில்லை" என்றான்.

**கர்னல்குமரவேல்:**—"என் வரையில் இதோ நான் கூறியபடி நான் தோற்று விட்டால் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் என் உத்தியோகத்தை யுனக்கு விற்று

விட்டதாகப் பத்திரம் எழுதி யிருக்கிறேன். இவர்களெல்லாம் அதற்குச் சாட்சி" என்றான்;

புதுமனிதன்:—அவைகளெல்லாம் அவசியமில்லை. உமது வாக்கே போதும். அதோடு இவர்கள் யாவரும் சாக்ஷியிருக்கிறார்கள். எனக்கு இவற்றில் எல்லாம் பழக்கமில்லை. இப்போது நீர் கூறுவதாவது என்னிட மிருக்கும் இந்தச்சவரன்கள், கடிகாரம் மோதிரங்கள் யாவற்றிற்கும் ஈடாக உமது உத்தியோகத்தை வைக்கிறீர். நான் தோற்றால் இவையாவற்றையும் உமக்களித்து விடவேண்டும். நீர் தோற்றால் உமது கர்னல் உத்தியோகத்தை யெனக் களித்துவிட வேண்டும். இது தானே விவகாரம்?" என்றான்.

கர்னல் குமரவேல் "ஆம் அவ்வளவே "என்றான். உடனே பாச்சிகை யுருட்டப்பட்டது. அங்கிருந்த அனைவரும் மிக்க ஆவலோடும் நெஞ்சு திடுக்கிட்டுக் கொண்டும் ஆட்டத்தைக் கவனித்துக்கொண் டிருந்தார்கள். கர்னலோ கை நடுக்கத்தோடும், உலர்ந்த நெஞ்சோடும், மன நடுக்கத்தோடும் பாச்சிகையை யுருட்டியதும்,

"அய்யோ கடவுளே! தோற்றேன்" என்று பேரிடி விழுந்தவன் போல் கூறினான். அப்போது தன் மனத்திகிலை யடக்க அவனால் முடியவில்லை. "நாம் அடியோடு பூரணமா யழிந்து போனோம்" என்று இவன் மனதிற்பட்டது.

புது மனிதனோ அப்போதும், சூரியன் மேற்கில் உதயமாயினும் இறந்தோர் எழுந்து நடக்கினும் அதையும் அதிசயம் என்று கவனியாதிருக்கும் ஞானிகள் போல் சர்வ சாதாரணமாகவும் அலட்சியமாகவும் அங்கிருந்த சவரன்கள் மோதிரங்கள் முதலிய யாவற்றையும் ஒரு கரத்தால் தன் ஜேபிக்குள் தள்ளிக்கொண்டு, கர்னல் எழுதிக்கொடுத்த

பத்திரத்தை யுட்சட்டை ஜேபியில் வைத்துக்கொண்டு வார்த்தை யாடிக்கொண்டே யிருந்தான். அங்கிருந்த அனைவரும் கர்னல் தன் உத்தியோகத்தையும் தோற்றதைப்பற்றி வியப்படைந்ததை விட இம்மனிதனுடைய நடக்கையைப் பற்றியே சொல்லொணு வியப்படைந்தார்கள்.

கர்னல் குமரவேல் தன் மனோவேதனையைச் சற்று சமாளித்துக்கொண்டு ஒரு மூலையில் போய் உட்கார்ந்து இரு கரங்களையும் மார்பின் மேல் கட்டிக்கொண்டு தலை குனிந்த வண்ணமாக ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். அவன் உதடுகளை அழுத்தி மூடிக்கொண் டிருப்பதாலும் அவனுடைய புருவங்கள் நெளிந்துகொண் டிருப்பதாலும் அவன் மனதிலுள்ள வேதனை மிக்க கொடியதென்றும், அவன் ஏதோ மிக்க துணிகரமான சிந்தனையிலிருக்கிறனென்றும் தெரிந்து கொள்ள லாகும். பெரும்பாலும் அவன் பிராணத்தியாகம் செய்து கொள்ளவே யோசித்திருப்பான். அந்தோ சூதாடல் முதலிய தீய நடக்கைகளை யுடையோர் பெரும்பாலும் அத்தகைய முடிவே யடைவதுண்டு.

இச்சூதையும் ஆன்றோர் பஞ்சமா பாதகங்களில் ஒன்ருகச் சேர்த்திருப்பதன் காரணம் அதனல் விளையும் தீவினைகளைக் கருதியே யாகும். சூதாடும் ஒரு நடக்கையால் பொய், மோசம், வஞ்சம், களவு, கொலை, தற்கொலை முதலிய பல பெரும் பாபச்செயல்கள் உண்டாகின்றனவென்பதை யுலகில் பிரத்தியட்ச அனுபவமாகக் காணலாகும். நமது கர்னல் அக்கொடிய பழக்கத்தால் விசேஷமாகக் கடன்பட்டு, அதனல் கடன் கொடுப்பவர்களுக்கு அடிமைப்பட்டு, பன்முறை பெரிய இக்கட்டுகளிற் சிக்கிக்கொண் டிருக்கிறன். யாவற்றினும் இப்போது அவன் அடைந்துள்ள நிலைமை கொடிதினுங் கொடிது. கையில் ஒரு காசு

மில்லை. கடன் கொடுப்பவர் ஒருவருமில்லை. தொழிலும் வருமானமும் கௌரவமும் அடியோடு போயின. இனியவன் அப்புதுமனிதன் ஏதேனும் கருணை காட்டினலன்றி,

"மானம்படவரின் வாழாமை முன்னினதே"

என்றபடி ஒன்று பிராணத்தியாக மேனும் செய்து கொள்ளவேண்டும், அல்லது நாட்டைவிட் டெங்கேனும் ஓடிவிட வேண்டும். அப்புதுமனிதன் ஒரு சமயம் கொஞ்சம் கருணை காட்டினலும் சுயநலங் கருதாது செய்வானென்பது என்ன நிச்சயம்? எத்தகைய பிரதிபலன் கேட்பானே, எத்தகைய நிபந்தனைகள் கூறுவானே யாரறிவர்? உலக அனுபவமுடைய குமரவேல் இவை யாவும் அறிவான். இவன் ஏக்கங்கொண்டவன்போல் உட்கார்ந்திருக்கையில் புது மனிதன் மெதுவாய் எழுந்து தின்பண்டங்கள் வைத்திருக்கும் மேஜை யருகிற் சென்று ஒரு கிண்ணம் ஒயின் அருந்திவிட்டு, நிதானமாகக் கர்னல் அருகிற்சென்றன். தலை நிமிர்ந்து அவன் வருவதைக்கண்ட கர்னல் "ஆ! பெரும்பாலும் இவன் நமக்கு மிக்க தீங்கிழைக்கமாட்டான். சவரன்கள் முதலிய யாவற்றையும் எடுத்துக்கொண்டு உத்தியோகத்தைப் பற்றிய கடிதத்தை மட்டு மாவது நமக்கு அளித்து விடுவான் போலும்" என்றெண்ணினன்.

அம்மனிதன் அவன் அருகில் நின்று "கர்னல் இன்று உமக்கு அதிஷ்டக் குறைவு நேர்ந்துவிட்டது." என்று கூறி நாற்புறமும் பார்த்து ஒருவரும் அருகிலில்லை யென்றுணர்ந்து கொஞ்சம் குனிந்து "மிக்க மனமுடைந்து போக வேண்டாம், நான் இந்த ஹோட்டலில்தான் தங்கியிருக்கிறேன். காலையில் என்னேடு போசனஞ் செய்யவாரும்" என்றன். இதைக்கேட்ட கர்னலுக்கு மிக்க வியப்பும் சந்தோஷமும் உண்டாயின. அவன் முகத்திலிருந்து வெளுத்த

நிறம் போய்ப் பிரகாசம் உண்டாயிற்று. கடைசியில் நமது உத்தியோகம் தக்கும் என்று எண்ணிக்கொண்டான். அதற்குள் ஒருவிஷயத்தை நினைத்துக்கொண்டு புதுமனிதனை நோக்கி,

"ஆ! நான் தங்கள் அறையை யறிந்து வருவதற்குத் தங்கள் நாமதேயம் இன்னதெனத் தெரியாதே" என்றான்.

புதுமனிதன் "ஆ! ஆ!! ஆம்; ஆம். நாமதேயம். ஆம் நாமதேயம் தெரியவேண்டியதே. அப்போதுதான் வேலைக்காரன் என் அறையையறிந்து உம்மை யென்னிடம் அழைத்துவருவான். நான் அதை மறந்துவிட்டேன். கர்ப்டன் உத்தண்டி என்பவர் அறையைக் காட்டும்படி கேளும்" என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

## 10-வது அத்தியாயம்.

கர்னல் குமாவேலும் காப்டேன் உத்தண்டியும்—திடுக்கிடும் சங்கதிகள்—மதனும்பாலைப்பற்றிச் சில விவரங்கள்—விசேஷ சங்கதிகள்—இரகசியங்கள் வெளிப்படல்—முடிவான ஒப்பந்தம்.

மறுநாள் காலை கர்னல் குமரவேல் படுக்கையிலிருந்து எழுந்திருந்தபோது இரவு நடந்த சம்பவங்கள் ஒரு பயங்கரமான கனவாகவேயிருக்கும் என்று முதலில் கருதினான். பிறகு வரவர நடந்த விஷயங்களனைத்தும் ஒன்றின் பின் னொன்றாகக் கிரமமாய் நினைவிற்கு வந்தபோது விரல்களைப்பார்த்தான். மோதிரங்கள் இல்லை, கடிகாரமுமில்லை. உடனே யாவும் உண்மையேயென்று மனதிற்பட்டதும் ஆவிசோர்ந்து ஆசனத்தில் சாய்ந்துவிட்டான். பிறகு அப்புதுமனிதன் தனக்குக் கூறிய தேறுதலான மொழிகளை

யும், காலைப்போஜனம் செய்யத் தன்னறைக்கு வரும்படி கூறியதையும் நினைந்துகொண்டு சற்று மனந்தேறினன்.

அதன் பிறகு சுமார் ஒன்பது மணிக்கு உடை யணிந்துகொண்டு தன் அந்தரங்க வேலைக்காரனை யழைத்து " அப்பாசாமி ! இந்த ஹோட்டலில் காப்டென் உத்தண்டி என்று ஒரு மனிதன் வந்திருக்கிறனே, அவன் எங்கிருந்து வந்தான், அவன் யார் என்ற விவரம் ஏதேனும் தெரியுமா உனக்கு ?" என்று வினவினன்.

அப்பாசாமி:—" எஜமானே ! இரவு ஒரு புதிய மனிதன் வந்தான். அவன் நேர்த்தியான ஒரு குதிரைமேல் ஏறி வந்தான், மிக்க நாணயமாகவே யுடுத்திக்கொண் டிருந்தான். பார்வைக்குக் கம்பீரமான தோற்றமுடையவன். நல்ல அந்தஸ்திலிருப்பவன் போலவே காணப்படுகிறன். ஆனல் அவன்கூட வேலையாள் ஒருவன் கூட வரவில்லை. மற்றபடி அவனைப்பற்றி வேறொரு சங்கதியும் நான் அறியேன்" என்றான்.

கர்னல் குமரவேல் சற்று சிந்தித்து, "அப்படிப்பட்டவன் ஒரு ஆட்காரன் கூட இல்லாமல் வந்தானென்பது மிக்க வியப்பாகவே யிருக்கிறது" என்றான். வேலைக்காரனகிய அப்பாசாமி,

" ஆ ! ஒரு சங்கதி கூற மறந்து விட்டேன். அம்மனிதன் ஹோட்டல்காரனிடம் தனக்கு முதற்றரமான அறை வேண்டும் என்று கூறியபோது தான் இலவணபுரிக்கு வந்த தினமே தன் வேலைக்காரன் அசௌக்கியத்தால் ஒருமாத விடுமுறை பெற்றுக்கொண்டு தன் சுற்றத்தார் வசிக்கும் ஊருக்குச் சென்றதாகவும், ஆகையால் தனக்கு நல்ல புத்திசாலியாகிய ஒருவாலிப வேலைக்காரனை யமர்த்திவைக்க வேண்டுமென்றும் கூறினன். ஹோட்டல்காரன் அவசியம்

அப்படியே அமர்த்தி வைப்பதாக ஒப்புக்கொண்டான். இதுதான் சங்கதி" என்றான். கர்னல் சற்றுநேரம் தனக்குள் ஏதோ சிந்தித்தானே யன்றி அப்பாசாமியிடம் வேறொன்றும் பேசவில்லை.

கர்னல் குமரவேல் சரியாக ஒன்பது மணிக்குப் புது மனிதன் இருக்கும் அறைக்குச் சென்றான். இருவரும் ஒருவர்க்கொருவர் வந்தன மளித்தபின் ஒரு மேஜையின் இருபுறங்களிலுமிருக்கும் நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். அம்மேஜைமேல் விலையுயர்ந்த பலவகை உண்டிகளும் பலகாரங்கள் பழங்களும், உயர்ந்த ஒயின் முதலிய குடிவகைகளும் பரிமாறப்பட்டிருந்தன. அந்த அறை யந்த ஹோட்டலிலுள்ள முதல்தரமான அறைகளிலொன்று.

இருவரும் போஜனம் செய்யத்தொடங்கியதே, காப்டன் உத்தண்டி நன்றாய்ப் புசித்துக்கொண்டே கர்னலை நோக்கி, "கர்னல்! இரவில் நெடுநேரம் கண் விழித்திருப்பதாலும் அகாலங்களில் போஜனம் செய்வதாலும் என் பசி கெட்டுப்போவதில்லை" என்றான்.

**கர்னல்:**—தாங்கள் கூறுவதை நோக்க அனேகம் இக்கட்டுகளில் சிக்கியிருப்பீர்களென்று கருதுகிறேன்.

**காப்டென்:**—கொஞ்சம் அப்படித்தான். ஒன்று கூறுகிறேன். மடியில் நிறையப் பணம் இருந்தும் வெறும் கிழங்கு கீரைகளையும் சேற்று நீரையுமே பலநாட்கள் ஒருவன் அருந்திகொண்டிருந்தானென்றால் அப்படிப்பட்டவன் எத்தகைய கெட்ட காலத்தை யனுபவித்திருக்கவேண்டு மென்பதைச் சிந்தித்துப்பாரும்.

**கர்னல்:**—தாங்கள் வெளி நாடுகளில் யாத்திரை செய்திருக்கிறீர்களென்று விளங்குகிறது.

காப்டேன்:—ஆகா! விசேஷமாக யாத்திரை செய்திருக்கிறேன். சண்டையிட் டிருக்கிறேன். பன்முறை பிராணுபத்தில் சிக்கிக்கொண் டிருக்கிறேன். அநாகரீகம் பொருந்திய காட்டு மிராண்டிகளாகிய இரக்கமற்ற குரூர ஜாதியார்களிடம் சிக்கிக்கொண்டு இரண்டு மூன்று முறை அவர்கள் கத்தி என் கழுத்தின் மேல் வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு முறை அவர்களால் என் கபாலம் பிளக்கப்படும் சமயத்தில் இருந்தது.

கர்னல்:—ஓ! அப்படியாயின் தாங்கள் மேற்கு நாட்டில் இருந்திருக்கிறீர்கள்.

காப்டேன் உத்தண்டி:—“ஆம். நான் தற்புகழ்ச்சிக்காகக் கூறவில்லை. நான் அனுபவித்த கஷ்டங்களையும், ஆபத்துகளையும், மயிரிடை பிராணுபத்தினின்றும் தப்பித்துக்கொண்ட சம்பவங்களையும், இதர விஷயங்களையும் கேட்டால் ‘அடடா இவனுக்கு எத்தனை உயிர்கள்தான் இருக்கின்றனவோ’ என்று கருதுவீர். கதைகளில் நம்பக்கூடாத அசம்பாவிதமான சம்பவங்கள் கூறப்படுவதுண்டு. நான் உண்மையாகவே அனுபவித்த ஆபத்துகளைக் கூறினல், கதைகளில் கூறப்பட்டவைகளைவிட மிக்க அதிசயமாகவும் அசம்பாவிதமானவைகளாகவும் தோன்றும் என்பதுண்மை.

ஒரு சமயம் நானும் என் நண்பர்களில் அறுவரும் பிராணனுக்குப் பயந்து காட்டில் ஒடி ஒளிந்து கொள்ள நேர்ந்தது. எழுபேரும் துஷ்ட ஜெந்துக்களடர்ந்த ஒருவித சதுப்புப் பூமியில் சயனித்துக்கொள்ள நேர்ந்தது. அப்பூமியிலிருந்து இராக்காலங்களில் ஒருவித விஷ ஆவி கிளம்புவதுண்டென்ற சங்கதி யெங்களுக்குத் தெரியாது. பொழுது விடியுமுன் என் கூட்டாளிகள் அறுவரும் இறந்து

போனர்கள். காலையில் நான் எழுந்திருக்க முயன்றபோது தேகத்தில் சக்தியேயில்லை. ஆயாசம் ஆதிகமாக விருந்தது. தாகவிடாய் சகிக்கக்கூடவில்லை. கடவுளே யென்று ஆவியை விட ஆயத்தமாய் அங்கேயே படுத்துவிட்டேன். எனக்கு ஸ்மரணை நீங்கிவிட்டது. பிறகு பலமான மழை தூறிய தால் நான் உயிரோடு தப்பினேன். துஷ்டமிருகங்கள் மத்தியில் வசித்தது பன்முறை யுண்டு. இரவு முழுமையும் புலிக்கும் கரடிக்கும் பயந்து காட்டில் மரத்தின் மேலேயே எச்சரிக்கையோடு உட்கார்ந்திருந்து இரவைக் கழித்திருக்கிறேன். கொடிய விஷத்தை யுடைய அந்நாட்டுப் பாம்புகள் பன்முறை யென்மேல் ஏறிச் சென்றிருக்கின்றன. அந்த அடவிகளில் அட்டையின் குணத்தையுடையதும் ஆனல் ஆமையைப்போல் வட்டமான உருவமுடையதுமாகிய ஒருவிதக் கொடிய ஜந்து உண்டு. அது நம்மேல் ஏறுவதும் நம் தேகத்திலுள்ள மாமிசத்தைக் கவ்விப்பிடித்துக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சுவதும் நாம் உணரவே மாட்டோம். ஆனல் சற்று நேரத்திற்குள் நமது தேகத்திலுள்ள இரத்தம் அதிகமாகக் குறைவதால் ஆயாசமும் மயக்கமும் தோன்றி முகம்வெளிர்த்து மடியவேண்டியதே. அங்குள்ள ஆறுகள் சிலவற்றில் இச் செந்துக்கள் அதிகமாக இருக்கின்றன. ஒரு மனிதன் குதிரைமேல் ஏறிக்கொண்டு ஆற்றைக்கடக்கமுயன்றல் பாதி யாறு செல்வதற்குள் அவன் குதிரையின் இரத்தம் உறிஞ்சப்பட்டு அது களைத்து விழுந்துவிடும். உடனே பெரிய கோரைப்பற்களையுடைய பயங்கரமான மீன்கள் ஒரு கூட்டமாக வந்து அக் குதிரையை யடியோடு தின்று விடும். ஒருநாள் இரவு நான் துஷ்ட மிருகங்களுக்குப் பயந்து ஒரு மரத்தில் ஏறி இரண்டாய்ப்பிரியும் ஒரு கிளையின் அடியில் உட்கார்ந்து கிளையின் ஒரு இடத்தில் சற்று உயரத்தில் இருந்த முடிச்சுப்போன்ற

தடித்த விடத்தின்மேல் சிரசை வைத்துக்கொண்டு உறங்கினேன். விடியற் காலம் சற்று வெளிச்சம் உண்டான போது, என் சிரசின் கீழிருந்த மரக்கிளையின் முடிச்சு அசைவது போன்ற உணர்ச்சி யுண்டாகவே திடுக்கிட்டு நிமிர்ந்து திரும்பிப் பார்த்தேன். அய்யோ கடவுளே! நான் சிரசை வைத்துக்கொண்டிருந்தது கிளையின் முடிச்சல்ல. அக்கிளையில் வளைந்து சுருட்டிக்கொண்டிருந்த ஒரு கொடிய விஷப்பாம்பு. அதன் சிரசு அடிப்பக்கம் இருந்தது.

இவ்வாறு பன்முறை மரணத்தை முகத்தின் முன் எதிரில் கண்டிருக்கிறேன். அப்படியிருந்தும் இதோ உயிரோடு இந்தக் காமதேனு என்ற ஹோட்டலில் உம்மோடு போஜனம் செய்துகொண் டிருக்கிறேன்."

கர்னல் குமரவேல்:—"தாங்கள் கூறுகிற ஆபத்துகளைக் கேட்கும்போது நெஞ்சு நடுக்கங் கொள்கிறது. அந்த நாட்டில் நேரிடும் இத்தகைய ஆபத்துகளில் சில வற்றை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மேற்கு நாட்டில் நமது அரசருக்குரிய பாகத்திலுள்ளவர்கள் கலகம் விளைவித்தபோது அரசருடைய சைனியங்கள் அவர்களை யடக்கச்சென்று அவர்களோடு சண்டையிட்டார்களல்லவா. அந்தச் சையனியம் திரும்பி வந்த போது அவர்கள் அந்நாட்டிலுள்ள மேல் கண்ட ஆபத்துகளைக்கூறினார்கள். தாங்களும் அரசன் சைனியத்தில் சேர்ந்து தான் கலகக்காரரோடு யுத்தம் செய்திருப்பீர்கள் என்று கருதுகிறேன்" என்றான்.

காப்டன் உத்தண்டி யலட்சியமாய் "அப்படிப்பட்ட ஒன்றில் தான்" என்றான்.

கர்னல்:—தாங்கள் திரும்பி வந்து நெடுநாட்களாயினவோ?

**காப்டேன்:**—நான் நேற்றுத்தான் வந்தேன். இலவணபுரி பூரணமாக மாறி விட்டது. எனக்கு இது ஒரு புது நகரம் போலவே தோன்றுகின்றது. ஒரு மனிதன், அதிலும் நம்போன்ற அந்தஸ்திலுள்ளவன் நான்கு பேரோடு கலந்து சம்பாஷணை செய்யவேண்டுமெனில் அவன் முக்கியமான விஷயங்களைப்பற்றியாவது அறிந்துகொண்டிருக்க வேண்டும். திருஷ்டாந்தமாக நமது சுத்த சிங்க அரசன் இருக்கிறார். அவருடைய சபையைப்பற்றிக்கூட எனக்கொன்றுமேதெரியாது. இராஜ சபையைப்பற்றிக் கூட ஒருவன் ஒன்றுமறியாதிருப்பது எவ்வளவு வெட்கக்கேடானது. நமது அரசருடைய வைப்பாட்டிகளில் சிலர் மிக்க அழகுவாய்ந்தவர்களென்று மட்டும் வெளியில் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களில் அரசருக்கு மிக்க பிரியமானவள் ஒருத்தி யிருப்பதாகவும் அவளுக்குத்தான் அரசரிடம் இப்போது அதிக செல்வாக்கென்றும் இன்னும் பல விதமாகவும் கேள்விப்பட்டேன். உண்மை யிப்படி யென்று அறியேன். நீர் கூறினால் தான் தெரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய விஷயங்களை யெல்லாம் கூற நீர் தாம் எனக்கு உபாத்தியாயராக விருக்க வேண்டும். இந்த விஷயம் முடிந்ததும் நாம் பேச வேண்டிய சங்கதியைப்பற்றிப் பேசலாம் என்றான்.

கடைசி வாக்கியத்தைக்கேட்ட கர்னல் குமரவேலுக்கு மனதில் கொஞ்சம் சந்தோஷம் உண்டாயிற்று. இவன் பிரியப்படி நாம் நடந்து கொண்டால் சுலபமாக நமது நோக்கம் நிறை வேறும் என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டு, "நமதரசர் ஒரு சந்திரன் போலும் அம்மாதர்கள் பிரகாசம் பொருந்திய நட்சத்திரங்கள் போலும். அவர்களில் சிலர் கழிந்து கொண்டும் அப்போதைக் கப்போது

புதுப் புது ஆட்கள் வந்து சேர்ந்து கொண்டும் இருக்கிறார்கள். இப்போது அரசனிடம் மிக்க செல்வாக்குடையவள் மதனாம்பாள் சீமாட்டி. அவளைப்போன்ற கம்பீரமான அழகுடையவள் ஒருவளுமில்லை" என்றான்.

காப்டன் உத்தண்டி "நேற்று நான் ஒரு ஹோட்டலில் போஜனம் செய்துகொண் டிருந்தபோது அம் மதனாம்பாளைப்பற்றி அங்குள்ளவர்கள் பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் சம்பாஷணையால் மதனாம்பாள் தனக்கு அரசனிட மிருக்கும் செல்வாக்கை உத்தம வழிகளில் உபயோகிப்பதில்லை யென்று தெரிகிறது" என்றான்.

கர்னல்:—இருக்கலாம். அது அவரவர்களுக்குள்ள இராஜாங்க முறைமையைப்பற்றிய அபிப்பிராயத்தைப் பொறுத்ததாக விருக்கிறது.

காப்டேன்:—நான் உன்னிடம் இரகசிய விஷயங்களை யறிய விரும்புவதாய்க் கருத வேண்டாம். நீ சின்னக் கட்சியைச் சேர்ந்த மனிதன். ஆகையால் எப்போதும் எச்சரிக்கை யோடேயே பேசவேண்டும்.

கர்னல் உற்சாகத்தோடு "ஆகா! சந்தேகமின்றி நான் இந்த அரசர் கட்சியில் திடவிசுவாச முடையவன். உண்மையைக்கூறுகிறேன். அரசன், அவனைச் சேர்ந்தவர்கள் இவர்களுடைய நடக்கைகளில் மற்ற பேர்களுக்குக் குற்றமாகத் தோன்றுபவைக ளெல்லாம் என் மனதிற்கு மிக்க பரிசுத்தமானவைகளாகவே காணப்படும். தாங்கள் கூறியபடி கோகிலத்தின் நடக்கைகளெல்லாம் அவளுடைய தேசப்பழக்கங்களை யொத்ததாக விருக்கும்...ஏன் இப்படி ஆச்சரியத்தோடு பார்க்கிறீர்?

காப்டன்:—நீர் மதனாம்பாளைப்பற்றிப் பேசுகிறீரென்று எண்ணினேன். இப்போது யாரோ கோகிலம் என்கிறீரே.

**கர்னல்:**—இது தெரியாதோ தங்களுக்கு! கோகிலம் என்பதே அவளுடைய ஆதிப்பெயர். பிறகு அரசரால் இடப்பட்ட பெயர் மதனம்பாள் சீமாட்டி என்பது.

**காப்டன்:**—ஓகோ அப்படியோ! எனக்கு இது தெரியாது.

**கர்னல்:**—"நான் கூறப்போவது நம்வரையில் இரகசியமாக விருக்கட்டும். இந்த மதனம்பாளுக்கு அரசரிடமுள்ள செல்வாக்குக்கு ஓர் அளவில்லை. அவள் வாய்ச்சொல்லே சட்டம். அவள் கோபத்திற்கு ஒருவன் பாத்திரமாய் விட்டானே, அவன் அடியோடழிந்து போவது நிச்சயம். அவள் தயவை யொருவன் சம்பாதித்துக் கொண்டால், அவன் எத்தகைய உயர்பதவியை வேண்டுமாயினும் ஒரு நொடியிலடைவான். அவள் வாசஸ்தலம் ஒரு சிறிய அரண்மனையே யாகும். அழகிலும் அலங்காரத்திலும் அரசன் அரண்மனை கூட அதற்கு ஈடாகாதெனலாம். அவள் நடத்தும் விருந்துகள் மிக்க சிறப்பானவை. பணம் ஒரு இலட்சியமாகக் கருதப்படுவதில்லை. ஆனல் அந்த விருந்துகளில் பொருக்கானவர்கள் மட்டுமே சேர்க்கப்படுவார்கள். அவளிடம் இருக்கும் வேலையாட்களும், பணிப்பெண்களும், காவலர்களும் அரசனிடம் கூட இல்லை. அரசனுடைய அரண்மனையில் நடக்கும் விருந்திற்கேனும் கொஞ்சம் கஷ்டத்தின் மேலாவது உள்ளே செல்ல ஒரு அழைப்புச்சீட்டுப் பெறலாம். இவள் விருந்துகளில் அழைப்புச்சீட்டுப்பெறுவது மிக்க அரிது. நாளையிரவு மதனம்பாள் மாளிகையில் ஒரு பெரிய விருந்தும் கேளிக்கையும் நடக்கப்போகின்றன. அவற்றிற்காக எனக்கு மொரு அழைப்புச் சீட்டுக் கிடைத்திருக்கிறது. அதன் பொருட்டாகவே நான் நகரத்திற்கு இப்போது வந்திருக்கிறேன்" என்றான்.

காப்டன் உத்தண்டி "ஆ! அப்படிப்பட்ட காட்சி காணத்தக்கதே. பொருக்கான ஆசாமிகளே தெரிந்தழைக் கப்பட் டிருப்பார்களென்று நம்புகிறேன்." என்றான்.

கர்னல்:—"ஆ! நான் கூற மறந்துவிட்டேன். நாளை நடக் கப்போவது முக மூடி விருந்து. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான வேட மணிந்து வரவேண்டும். அதற்காக வேண்டிய உடைகளுக்கு ஏற்பாடுசெய்யவே இரண்டு நாட்கள் முன்னுடியாக வந்தேன். ஆ! நான் எவ்வாறு தான் இப்போது அதற்கு ஏற்பாடு செய் வதோ ஓ கடவுளே!" என்றான்.

காப்டன்:—ஏன்? அதற்குள் என்ன உற்சாகக்குறைவான ஆலோசனை உமது மனதில் வந்து விட்டது?

கர்னல்:—ஏனு? இரவு என்னிடமிருந்த பணம் முழுமை யும் ஒரு காசு கூட மிச்சம் இன்றித் தோற்று விட்டே னல்லவா?

காப்டன்:—ஆ. ஆம் ஆம் நான் மறந்து விட்டேன். உண்மையே.

கர்னல் குமரவேல்:—காப்டென்! நான் உண்மையை வெளி யிடுகிறேன். இச்சூதாட்டத்தால் பலவிடங்களில் கடன் வாங்கி, கொடுக்கவேண்டிய தவணை தவறிப்போய் விட்டிருக்கிறது. அதனுல் தையற்காரன் பணம் கொ டுக்காமல் உடுப்பை யளிக்கமாட்டான். தயார் செய்து ஹோட்டலுக் கனுப்பும்படி கூறி யிருக்கிறேன். ஹோட்டலுக்குக் கொண்டுவரப்பட்டு நான் பணம் கட்டி அதை வாங்கிக்கொள்ளாமல் அவனே யெடுத் துச்செல்லும்படி நேர்ந்தால் பெரிய மானக்கேடாகும். அதைவிடப் பிராணச்சேதம் செய்து கொள்ளலாம். இதோடு நாளை நடக்கும் அந்தக் கேளிக்கைக்கு நான்

போகாவிட்டாலோ, மதனம்பாள் சீமோட்டியின் கோபத்திற்காளாகி அதோடு அழியவேண்டியதே. அவள் அழைப்புச்சீட்டு அரசனுடைய கட்டளையை விடச் சிரேஷ்டமாக மதிக்கப்படவேண்டும். தன்னை யலக்ஷியம் செய்வதாக மட்டும் அவள் கருதி விட்டாலோ, அம்மனிதன் சீக்கிரம் நாட்டை விட்டோடி விடுவதே நலம். இதோடு அரசரும் அந்த விருந்திற்கு வருகிறார். இப்போது நான் எத்தகைய பெரிய இக்கட்டான நிலைமையில் சிக்கிக்கொண்டிருக்கிறே னென்பதைத் தாங்கள் சிந்தித்துக் கொள்ளலாம்" என்றான்.

காப்டன் உத்தண்டி சலகரணையாகப் பேசத்தொடங்கி, "கர்னல்! நீர் உலக அனுபவத்தில் நன்கு பழகியவர். எனக்கு அவ்விஷயத்தில் சொல்ப பழக்க முண்டு. தாங்கள் சூதாடும்போது ஜெயமடைய வேண்டு மென்ற எண்ணத்தோடுதான் ஆடுகிறீர். ஜெயித்த பொருளை வைத்துக் கொள்ளவேபிரியப்படுவீரன்றி ஒருவருக்குச் சும்மா கொடுத்து விட நினையீர். இப்போது நான் அத்தகைய ஆபத்துக்குட் பட்டு ஜெயமடைந்தேன். ஏதோ அதிஷ்டம் எனக்கு அனுகூலமாக விருந்தது. அப்படியிருக்க அவற்றை நான் அடியோடு சும்மா கொடுத்து விடுவேனென்று நீர் கருத மாட்டீரென்றே நம்புகிறேன். ஆயினும் ஒன்றுக்கொன்று பதிலாக மாற்றிக்கொள்ளலாகும் எனக்குத்தக்க ஈடாக நான் கருதுவதை யெனக்களித்தால் நான் ஜெயத்தை யளிக்கலாம். நான் கூறுவது நியாயந்தானே?" என்றான்.

கர்னல்:—ஆகா சரிதான் கூறும்.

காப்டன்.—தங்கள் உத்தியோகம், மோதிரங்கள், கடிகாரம், பணத்தில் பாதியும் கொடுத்து விடுகிறேன். ஆனால் பதிலுக்கு நீர் ஒரு உபகாரம் செய்ய வேண்டும்.

கர்னல் ஆவலோடும் திகிலோடும் "என்ன நிபந்தனை?" யென்று கேட்டான்.

**காப்டன் உத்தண்டி:**—"நாளையிரவு மதனும்பாள் சீமாட்டியின் மாளிகையில் நடக்கும் முகமூடிக் கேளிக்கைக்கு நானும் வரும்படி எனக்கொரு அழைப்புச் சீட்டுச் சம்பாதித்துத் தரவேண்டும்." என்றான். இதைக் கேட்டதே கர்னல் முகம் வாடிவிட்டது. அச்சமயம் அக்காரியத்தை யெப்படிச் செய்வதென்று அவனுக்குச் சற்றேனும் புலப்படவில்லை.

அவன் முகக்குறியையுணர்ந்த காப்டென், "மறுபடி சிந்தித்தால் அது வீண் என்றே தோன்றுகிறது. ஏதோ சபலசித்தத்தால் அவ்வாறு கூறிவிட்டேன்; ஆயினும் எனக்கொரு சீட்டுத் தருவித்துக் கொடுத்தால் நான் வாக்களித்தபடி அவற்றை யளித்துவிடுகிறேன். உமக்குக் கஷ்டமாகப் புலப்படின் தள்ளிவிடும்." என்றான்.

**கர்னல்:**—"இப்போது தாங்கள் எனக்கு மிக்க இக்கட்டான கஷ்டத்தை யுண்டாக்கி விட்டீர்கள். இராஜன் அரண்மனைக்குள் செல்ல முயல்வதைவிட இச்சீமாட்டியின் மாளிகைக்குள் இத்தகைய சமயங்களில் செல்வது மகாகஷ்டம். அந்தவிடத்தைச் சுற்றிப் பலமானகாவல் வைக்கப்பட் டிருக்கிறது. ஒவ்வொருவரும் தமக்கு வந்த அழைப்புச் சீட்டைக் காட்டிவிட்டே உள்ளே செல்ல வேண்டும். ஒருவருக்கு வந்த சீட்டை யின்னொருவருக்கு மாற்றலாகாதென்பது கண்டிப்பான விதி. சீட்டுப் பெற்றவர்களில் யாரேனும் ஒருவர் அங்குவரப் பிரியமில்லாமலிருந்து நமக்கு அச்சீட்டை யளிக்கச் சம்மதிக்கவேண்டும். அப்படி யிங்குவரச் சந்தர்ப்பம் கிடைப்பதே யருமை. அப்படியிருக்கக்

கிடைத்த சந்தர்ப்பத்தை யிழந்துவிடக் கூடியவர்கள் யாருளர்? எனக்குத் தெரிந்தவரையில் என்பட்டாளத்திலிருக்கும் உத்தியோகஸ்தரில் இருவருக்கு மட்டுமே யழைப்புச்சீட்டு வந்திருக்கிறது. அவர்களிலொருவர் மேஜர் கேசவலிங். அந்த ஆளிடம் இச்சங்கதியைப் பிரஸ்தாபிக்கவேகூடாது. இன்னொரு ஆள் காப்டென் உலகநாயகன். அவனுக்கும் எனக்கும் மனஸ்தாபம்'' என்றான்.

**காப்டன் உத்தண்டி** :—இரவு அந்த இருவரும், அந்த உலக நாயகன்—நல்ல பெயர் அங்கு வந்திருந்தார்களோ?

**கர்னல்** :—" இல்லை. அதிலும் உலக நாயகனா! அவன் சின்னக் கட்சியாகிய அரசன் கட்சியில் ஒரு படைவீரனாகவிருந்தாலும், நடவடிக்கை கண்டிப்பானவன். அவனாவது சூதாடுமிடத்தில் அடியெடுத்து வைப்பதாவது!'' என்றான்.

**காப்டன்** :—அப்படியாயின் உமது படையில் நன்னடக்கையுடைய யோக்கியன் ஒருவனாவது இருக்கிறான். அப்படிப்பட்ட யோக்கியன் உன்னுடைய மனஸ்தாபத்திற்கு எப்படி ஆளானான்?

**கர்னல்** :—அது ஒரு கன்னிகையைப்பற்றிய அற்பவிஷயம். அவன் கர்னல் இரகுநாதருடைய புத்திரியின்மேல் காதல்கொண்டிருக்கிறான் என்று தெரிகிறது.

**காப்டன்** :—ஆ! கர்னல் இரகுநாதர், பெரிய கட்சி சைனியத்தில் பிரக்யாதி பெற்றவர். அவர்தாமே?

**கர்னல்** :—ஆம். ஆம். அவர்தாம். அந்த ஆள் இப்போது இரொட்டிக்கிடங்கில் இருக்கிறான். அம்மாளிகை சுகவிலாசம் என்ற இன்னொரு மாளிகைக்குச் சற்று தூரத்திலிருக்கிறது.

உத்தண்டி :—எனக்கு நினைவிருக்கிறது. முன்பு அப்பாகங்களை யெல்லாம் பார்த்திருக்கிறேன். அக்கட்டிடம் நல்ல காவலான மாளிகை. அது வெள்ளையாற்றின் கரையி லிருக்கிறது.

கர்னல் :—ஆம். ஆம். அதே. தாங்கள் கூறிய சங்கதி...?

காப்டன் உத்தண்டி :—அத்தகைய நேர்மையான நன்னடக்கை யுடைய வாலிபனுகிய அந்த உலகநாயகன் அத்தகையை கேளிக்கைகளுக்கெல்லாம் பிரியப்பட மாட்டான். அவனைக்கேட்டால் அவனுடைய அழைப்புச்சீட்டைக் கொடுத்து விடுவான்.

கர்னல்:—நான் அவனோடு சலகரணையாய்ப்பேசுவதில்லை யென்று கூறினேனே அதைமறந்து விட்டீர் போலிருக்கிறது.

காப்டன்:—ஆ! ஆம்; ஆம் மறந்து விட்டேன். அது ஒரு பெண்ணைப் பற்றி யென்று கூறினீரல்லவா ?

கர்னல்குமரவேல்:—ஆம்; நான் ஒரு நாள் பஞ்சநாதம் பிரபுவைக்காண்பதற்காகச்சுகவிலாசத்திற்குச்சென்று கொண்டிருந்தேன். வெள்ளை யாற்றின் கரையில் இரொட்டிக்கிடங்கினருகில் மிக்க அழகிய ஒரு கன்னிகையைக்கண்டேன். அவள் கர்னல் இரகுநாதன் புத்திரி யென்று அப்போது எனக்குத்தெரியாது. நான் அவளை யாலிங்கனம் செய்து கொள்ள முயன்றேன். இந்தக் குற்ற மற்ற சாதாரண செய்கையிலிருக்கும் போது உலகநாயகன் என்னை முரட்டுத்தனமாக அடித்துக் கீழே வீழ்த்திவிட்டான். நான் உடனே அவனை வேலையில் போய்ச் சேரும்படி கட்டளையிட்டேன். மதனம்பாள் சீமாட்டியின் அழைப்புச்சீட்டிற்கு அரசன் கட்டளைக்குக்காட்டும் மரியாதை

யினும் அதிகமரியாதை காட்டவேண்டும். அப்படிக் கில்லாவிட்டால் அவன் இங்கு வர அனுமதியளித் திருக்கமாட்டேன்.

காப்டன் உத்தாண்டி புன்னகை புரிந்து கொண்டே "அப்படி யானல் கர்னல்! நீர் அந்தக் கிழப்பயலாகிய பெரிய கட்சியான் மகளைப்பற்றி ஏதோ ஏற்பாடு செய்யத் தீர்மானித்திருக்கிறீர் என்று நிச்சயமாகக்கூறுவேன். ஆ! பேஷ் தெரிந்து கொண்டேன். அந்த உலக நாயகனை யப் புறப்படுத்தி வைப்பது உமது காரியத்திற்கு மிக்க அனு கூலம்," என்றான்.

கர்னல் குமரவேல் "நாம் இவனுக்குச் சந்தோஷ முண்டாகும்படிக்கும், நாம் இவனைச் சிநேகனுய் நம்புவதுபோல் இவன் நினைக்கும் படிக்கும் நடந்து கொண்டால் ஒரு சமயம் முன் கூறிய நிபந்தனையை இவன் மாற்றிவிட்டு வேறு சுலபமான ஏதேனு மொரு நிபந்தனை கூறுவான்" என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டு, தானும் நகைத்துக்கொண்டே, "காப்டன்! நான் உண்மையாகக் கூறுகிறேன். காண்போர் மயங்கத்தக்க வனப்புவாய்ந்த ஒரு கன்னிகையை யடைவதற்குக் கஷ்டமான பிரயத்தனம் செய்யப் பின்னிடைய மாட்டாய்" என்றான்.

காப்டன் "சந்தேக மின்றி ஒரு பெண்ணின் அழகிற்குக்கௌரவமும் மரியாதையும் செய்யப்பின்னிடைபவன் சுத்த மூடனுகவும் புருஷத்தன மில்லாதவனுகவு மல்லவோ இருக்க வேண்டும். சில விஷயங்களில் நாமிருவரும் ஒரே அபிப்பிராய முடையவர்களா யிருக்கிறோம்" என்று நகைத்துக்கொண்டே கூறினன்.

கர்னல் பின்னும் சந்தோஷ மடைந்து, "ஆம். நாம் நண்பர்களாவோம் என்றே நம்புகிறேன். இதை நிரூபிப்

பதற்காக நான் உம்மிடம் ஒரு இரகசியம் கூறுகிறேன். அந்தக்காப்டென் உலகநாயகனைத் தண்டிப்பதற்காக அப்பெண்ணைத்தூக்கிக்கொண்டு போய்விடப் போகிறேன்." என்றான்.

காப்டென் உத்தண்டி இன்னும் நகைத்துக்கொண்டே என்ன? "தூக்கிக்கொண்டு போகப் போகிறீரா?" என்றான்.

கர்னல் குமரவேல் "சே சே ! நான் கலியாணம் செய்துகொள்ளும் மூடனல்ல. அப்படிச் செய்துகொள்வதாயின் திரண்ட ஆஸ்தி கொண்டு வருகிற பெண் கிடைத்தால் செய்துகொள்வேன். அத்தகைய பெண் எங்கே யகப்படப்போகிறாள். இக்காலத்தில் சாத்தியமல்ல. இனி நமது சமாசாரத்தைப்பற்றி ஒரு முடிவு செய்யலாமே..." என்றான்.

காப்டன் உத்தண்டி சட்டென்று தன் நகைப்பு சந்தோஷம் யாவற்றையும் அடக்கிக்கொண்டு கண்டிப்பான மொழிகளாக "என் நிபந்தனை யுனக்குத்தெரியும். அதாவது, நான் உம்மிடம் ஜெயித்துக்கொண்ட நகைகள் கெடிகாரம் பணத்தில் பாதி, உமது உத்தியோகம் இவற்றைக் கொடுத்து விடுகிறேன். நீர் மதனம்பாள் சீமாட்டியின் விருந்திற்கு நாளை யிரவு நான் வரும்படி எனக்கொரு அழைப்புச் சீட்டுச் சம்பாதித்துத் தரவேண்டும்" என்றான்.

கர்னல் "அப்படிச்செய்ய என்னால் முடியாதென்றலோ?" என்றான். காப்டன் உத்தண்டி "அப்படி யாயின் நிபந்தனைப்படி சீக்கிரத்தில் உமது உத்தியோகப்பத்திரத்தைக் கொண்டுவந்து என்னிடம் அளித்துவிட வேண்டியதே" என்றான்.

கர்னல் சுளித்த முகத்தோடு "அப்படி யானல் நான் ஆலசியமின்றிப்போய் அழைப்புச் சீட்டு யாரிட மிருந்தா வது அகப்படுமோ வென்று பார்க்கவேண்டியதே. தாங்கள் ஒரு பிடிவாதமாகக்கூறும் போது நான் தங்களுக்குத்திருப் திசெய்ய முயலவேண்டியதே" என்று கூறி விட்டு எழுந்து சென்ருன்.

## 11-வது அத்தியாயம்.

மதனம்பாள் சீமாட்டியின் மாளிகையில் அற்புதக்காட்சி—முகமூடி விருந்தும் கேளிக்கையும்—அரியநாதம்பிரபு—கேளிக்கையில் சுத்த சிங்க அரசன்—கீழ் நாட்டுமாந்திரீகன்—மாந்திரீகனது அற்புதச் செயல்கள்—மூவர்திடுக்கிட்டுப்பிரமித்தல்—குழப்பம்—மாந்திரீகன் மறைந்து விடல்.

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த மறுநாள் இரவு சுமார் ஒன்பது மணி யிருக்கும். அப்போது அரசருடைய அரண்மனை யிருக்கும் வீதியில் நின்று ஒருவன் பார்ப்பானே யாயின் மிக்க அற்புதமான காட்சியைக்காணலாகும். இரட்டைக்குதிரைகள், நான்கு குதிரைகள், ஆறு குதிரைகள் பூட்டிய விலை மதிப்பும் நாக ரீகமு முடைய வண்டிகள் ஒன்றின் பின் ஒன்ருக எறும்புத் தாரைபோல் சென்றுகொண் டிருந்தன. இவையன்றி இவற் றில் ஏறிச்செல்வோர்கள் உயர்ந்த அந்தஸ்திலுள்ள மிக்க செல்வவந்தர்களே யாவர். அவர்கள் அணிந்திருக்கும் உடைகளோ மிக்க விலைமதிக்கத்தக்கவைகள். அவர்க ளணிந்திருக்கும் நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற ஆபரணங் கள் காண்போர் கண்கள் கூசும்படி ஜொலித்துக்கொண்டிருந் தன. அந்த வண்டிகளின் மேல் சித்திரிக்கப்பட்ட பிருதுகள்

கொடிகள் முதலியவற்றால் அவற்றி லிருப்போருடைய அந்தஸ்தை மட்டும் தெரிந்து கொள்ளலாம். ஆனால் உள்ளிருப்பவர்களெல்லாம் பலவித வேடங்களை யணிந்திருப்பதோடு முக மூடியு மணிந்திருப்பதால், ஆட்கள் யாரென்றறிய முடியாது. வண்டிகளன்றி நாற்காலி போன்ற ஆசனத்தையுடைய ஒருவித பல்லக்குகளும் சென்றுகொண்டிருந்தன. இத்தகைய வாகன மில்லாத அனேகர் புரவிகளி லேறிச்சென்றார்கள்.

மதனாம்பாளுடைய மாளிகையின் முதல் வாயிற்படியில் அனேகம் படைவீரர்கள் காவல் நின்றார்கள். அவர்களில் சிலர் வரும் வண்டிகளை யொரு ஒழுங்காக நிறுத்தி அவற்றிலுள்ளவர்கள் இறங்கியபின், அவ்வண்டிகள் உடனே திரும்பிச்செல்லும்படி கவனித்துக்கொண் டிருந்தார்கள். சுமார் இரண்டு மணி நேரம் அப்பாதையில் சாதாரண ஜனங்கள் செல்வதற்கு முடியாமலே யிருந்தது. அந்நகரவாசிகள் அத்தகைய அற்புதமான காட்சியை யனேக நாட்களாகக் கண்டதே யில்லை.

இனி மதனாம்பாள் சீமாட்டியின் மாளிகைக்குள் என்ன நடக்கிறதென்று கவனிப்போம். அச்சீமாட்டியின் மாளிகையில் மிக்க விசாலமான இரண்டு கூடங்களுண்டு. அங்குதான் அந்த இரவு முகமூடிக் கேளிக்கை நடக்கிறது. அக்கூடங்கள் பொருட் செலவைக் கருதாது அலங்காரம் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சுற்றிலும் தொங்கவிடப்பட்டிருக்கும் உயர்ந்த மொகம்மல் பட்டுத்திரைகள் முழுமையும் தங்கச் சரிகையாலும் முத்து இரத்தினங்களாலும் சித்திரவேலைகள் செய்யப்பட்டிருந்தன. அங்கிருந்த நாற்காலிகள் சோபாக்கள் யாவும் தங்கத்தகட்டினால் மூடப்பட்டு நவரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந்தன. அலமாரி

பீரோக்கள் பெட்டிகள் யாவும் அவ்வாறே விலை மதிக்கப் படாதவை. அக்கூடங்களின் இருபக்கங்களிலும் இரண்டு பெரிய அறைகளிருந்தன. அவற்றில் பிரம்மாண்டமான மேஜைகள் போடப்பட்டு அம்மேஜைகளின் மேல் பொற் சரிகையால் பூ வேலை செய்யப்பட்ட பட்டுச்சீலைகள் விரிக் கப்பட்டிருந்தன. அவற்றின்மேல் தங்கப் பாத்திரங்கள் வெள்ளிப் பாத்திரங்களில் அரிய அறுசுவை யுண்டிகளும், உயர்ந்த பலகார வகைகளும், பழவகைகளும், பல தினுசுக ளாகிய உயர்ந்த குடிவகைகளும் ஏராளமாக வைக்கப்பட் டிருந்தன. உலகத்திலுள்ள எந்த அரசன் அரண்மனையிலும் அத்தகைய கம்பீரமான அலங்காரங்களையும் செல்வப் பெருக்கையும் காண்பதரிது.

சரியாக ஒன்பது மணிக்கு மதனம்பாள் தன் அறையி லிருந்து அக்கூடத்திற்கு வந்து, வரும் விருந்தினரை வர வேற்கத் தொடங்கினுள். அச்சமயம் அவள் அணிந்திருந்த உடைகளையும் ஆபரணங்களையும் பற்றிக் கூறத்தொடங் கின் இடம் போதாது. ஆகையால் அவளணிந்திருந்த நவ ரத்தினக் கோவைகளின் மதிப்புத்தொகை ஒரு இராஜாங் கத்தை விலைக்கு வாங்கத்தக்கது என்று கூறுவதோடு நிறு த்துகிறோம். வாயிற்படியில் படைவீரர் காவல் நின்றார் கள். சிமாட்டியின் வேலைக்காரன் ஒருவனும் அங்கு நின்று கொண்டிருந்தான். வருகிறவர்கள் கொடுக்கும் அழைப் புச் சீட்டுகளை வாங்கிக்கொண்டு அவர்களை யுள்ளே விடு வதே அவன் வேலை. சீட்டில்லாமல் ஒருவரும் உள்ளே செல்லமுடியாது. ஆனுல் அந்த வேலைக்காரன், வந்தவர் கள் யாரென்று அறிந்துகொள்ள முடியாது. ஏனெனில் ஒவ்வொருவரும் மாறுவேடத்தால் தங்கள் நிஜ உருவை மறைத்துக்கொண்டிருப்பதோடு முகமூடியணிந்து கொண் டிருக்கிறுர்கள். விளையாட்டு நடக்குந்தனிலும் அவ்வாறு

உருத்தெரியாதிருந்தால்தான் வேடிக்கையும் கேளிக்கையும் உற்சாக முள்ளனவாகவிருக்கும். குறித்த நேரங்கழிந்த பின் யாவரும் தங்கள் தங்கள் முகமூடியைக்களைந்துவிட்டுச் சாதாரண உடை யணிந்து கொள்வார்கள். அப்போதும் அவரவர்கள் கூறினலன்றி இன்ன வேடந்தரித்திருந்தது இன்ன ஆள் என்று தெரியாது. அச்சீமாட்டியின் விருந்திற்கு வரச் சந்தர்ப்பம் வாய்ப்பதே யருமை யாதலில் ஒருவரும் தமக்கு வந்த சீட்டை யின்னொருவர்க் களிக்கமாட்டார்களென்பது நம்பிக்கை. இதற்காக முகமூடி யணிந்து கொள்ளாமலிருப்பவர்கள், மதனம்பாள் சீமாட்டியும் அவள் தோழிகள் நால்வரும் மட்டுமே.

விருந்தினர் ஒவ்வொருவராய் வந்து சேர்ந்துகொண்டேயிருந்தார்கள். சரியாகப் பத்து மணி யடித்தது. அப்போது வெளியில் காவல் நின்றிருந்த சீமாட்டியின் வேலைக்காரன் அவளிடம் வந்து "அம்மா! வெளியில் அனுப்பப்பட்ட ஐந்தாறு சீட்டுகளும் வந்து சேர்ந்துவிட்டன" என்றான். அங்கு வந்திருந்தவர்களனைவரும் மாறுவேட மணிந்திருந்தார்களெனினும் அவர்களணிந்திருந்த ஆடையாபரணங்கள் மிக்க அழகும் விலை மதிப்பு முடையவைகள். இப்போது நாம் கூறப்போகும் இரண்டொரு வேடங்களின் விவரத்தால் அது நன்கு விளங்கும்.

அங்கு எல்லா நாட்டார்களைப்போலும், பூர்வீகத்தில் இருந்தவர்களைப் போலும் வேடமணிந்து வந்திருந்தார்கள். அரசர்கள், பிரசித்தி பெற்ற மந்திரிகள், படைத்தலைவர், வேலைக்காரர், வானசாஸ்திரி, ஜோதிடன், மாந்திரீகன், குரு, சன்னியாசி, பண்டாரம், மாணவன், யாசகன், மாலுமி முதலிய சகல ஜாதியார், சகல தொழிலாளர் முதலிய எல்லா வேடங்களும் அங்கிருந்தன. ஒருவன் பண்டார வேடம்

தரித்திருந்தான். அவன் உடை காவிக்கல்போல் மங்கலான சிவப்பு நிறமுடைய உயர்தரப் பட்டினுல் செய்யப்பட்டுப் பொற் சரிகையால் மேலே பஞ்சாக்ஷர எழுத்துக்கள் சித்திரிக்கப்பட்டிருந்தது. அவனுடைய உருத்திராக்க மாலைகளின் மணிகள் பொற்கவச மிடப்பட்டு இரத்தினங்கள் இழைக்கப்பெற்றிருந்தன. அவன் கக்கத்திலிருந்த குடை பட்டுச் சீலை போடப்பட்டது. அதன் உயர்ந்த தந்தப்பிடியில் பொன்னுல் பூ வேலைகள் செய்யப்பட்டு நவரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந்தன. அவன் திருவோடு பொற்றகட்டால் செய்யப்பட்டு ஓரங்களில் குந்தன வேலை செய்யப்பட்டு மூன்று வரிசை விலை யுயர்ந்த இரத்தினங்கள் பதிப்பிக்கப்பட்டிருந்தன. அதன் சங்கிலியும் பொன்னே. அவன் காலில் அணிந்திருந்த பாதக்குரடுகள் பிரகாசம் பொருந்திய தந்தத்தால் செய்யப்பட்டவை. அவற்றின் குமிழ்கள் பொற்றகட்டால் மூடப்பட்டு இரத்தினங்களிழைக்கப்பட் டிருந்தன.

ஒருவன் மலைநாட்டு இடையன் போல் வேடந்தரித்திருந்தான். அவன் தோள்மே லிருந்த கம்பளம் குறைந்தது ஆயிரம் ரூபாய் பெறும்படியான காஷ்மீர நாட்டுச் சால்வை. அவன் கையிலிருந்த துறட்டுக்கோல் முத்துச் சிப்பிகள், பொன் தகடு, முத்து நவரத்தினங்களால் அழகு பெறச் செய்யப்பட்டிருந்தது. மற்ற எல்லா வேடதாரிகளும் இவ்வாறே யிருந்தார்கள்.

நமது கர்னல் குமரவேல் ஒரு மலைநாட்டுச் சமீன்தார் வேடந்தரித்திருந்தான். அவனுடைய உயரமான கம்பீர உருவத்திற்கு அவ்வேடம் தகுதியுடையதாக விருந்தது. நமது காப்டென் உலகநாயகன் ஒரு பாஞ்சால நாட்டு மாணவன் வேடந்தரித்திருந்தான்.

நேயர்களே! இப்படியே எல்லார் வேடங்களையும் கூறி விடுவோமென்று எண்ணி விடாதீர்கள். அப்படிக்கூறின் முன்னடியே மர்மம் வெளிப்பட்டுக் கதையில் இரசம் குறைந்து விடும். அத்தகைய கேளிக்கைகளுக்கு வருவதே நமது உலகநாயகனுக்குப் பிரியமில்லை. மதனம்பாள் சீமாட்டியின் அழைப்புச் சீட்டிற்கு அவமரியாதை செய்யலாகாதென்றே அவன் வந்தான். அக்கூட்டத்தில் கலந்து கேளிக்கையாக விருக்க அவனுக்குச் சற்றும் விருப்பமேயில்லை. ஆகையால் அவன் நோக்கப்படி யிருப்பதற்கு அந்த மாணவ வேடமே தகுதியானது. அவன் அந்த வேடத்தோடு கையில் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு அதை பக்கரையோடு வாசிப்பவன் போல் அபிநயித்துக்கொண் டிருந்தான். அங்கு வேடந்தரித்து வருவோர்கள் ஏறக்குறையத் தமது வேடத்திற்குத் தக்கவாறு நடிக்கக் கூடியவர்களாகவே யிருப்பார்கள். ஒவ்வொருவரும் தமது குரல் தெரியா வண்ணம் கூடிய வரையில் மாற்றிப்பேசுவார்கள். இத்தகைய கூட்டங்களில் பெயரை வெளியிடாமலே ஒருவருக்கொருவர் தமது காதலை வெளியிட்டுக்கொள்ள நல்ல சந்தர்ப்பம் வாய்க்கும். சில காதலர்கள் அதற்கென்றே அத்தகைய விடங்களுக்குச் செல்வதுண்டு.

இக்கூட்டத்தில் அரசர்களிடமிருக்கும் சிறுகையாள் போல் வேடந்தரித்திருந்த ஒரு சிறுவன் இருந்தான். அவனுக்கு வயது பனிரெண்டாகிறது. அவன் மதனம்பாள் சீமாட்டியின் புத்திரன். அவன் சுத்த சிங்க அரசனுக்குப் பிறந்தவனென்று யாவராலும் கருதப்படுபவனயினும் அரசனுடைய அங்க அடையாளங்களிலாவது சாயலிலாவது கொஞ்சங் கூட அவனிடம் இல்லாததால் அவன் அரசனுடைய மகனல்லவென்று கருதுவோரும் சந்தேகிப்போரும் அநேகருண்டு.

தன்னைப்பற்றிப் பெரும்பாலோர் கெட்ட அபிப்பிராயமே கொண்டிருப்பதால், அவர்கள் தன்னைப்பற்றிப் பேசும்போது அகௌரவமாகவே பேசுவார்களென்றும், அத்தகையோரிற் சிலர் இங்கு வந்திருக்கலாகுமென்றும், சீமாட்டி யறிவாள். தன்னைப்பற்றிய அகௌரவமான விஷயங்கள் தன் புத்திரன் செவிகளில் விழக்கூடாதென்று அச்சீமாட்டி மிக்க எச்சரிக்கையாக விருப்பது வழக்கம். ஆகையால் இன்னவிதமாக உடையணிந்து இன்ன வேடந்தரித்திருப்பவன் தன் புத்திரனென்று மெதுவாய் யாவருமறியும்படிச் செய்து விட்டாள். ஏனெனில் அவன் இன்னவனென்று தெரிந்திருந்தால், தன்னைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பவர்கள் அவனைக் கண்டதும் பேச்சை நிறுத்தி விடுவார்களென்பதே அவளுடைய யோசனை.

சரியாக மணி பத்தடித்த சற்று நேரத்திற்குக் கடைசியாக ஒரு விருந்தாளி வந்தான். அவனைச் சீட்டு இருக்கிறதாவென்று கேட்க யாருக்கும் தைரியமிராது. அவன் மாறுவேட மணிபவனுமல்ல. அவனே சுத்த சிங்க மகாராஜன். அரசன் எப்போதும் போல் நேர்த்தியான உடை யணிந்துகொண்டிருந்தான். அப்போது அரசனுக்கு வயது நாற்பத்தைந்து. அவன் பொய்ச்சிகை வைத்துக்கொண்டிருந்தான். அரசன் கூட ஒரு பிரபு வந்தார். அவரும் வேட மணிந்துகொண்டிருக்கவில்லை. அவருடைய நாமதேயம் அரியநாதம் பிரபு. இந்தப் பிரபுவுக்கு மேற்கு நாட்டில் சுமார் இலக்ஷம் பவுன் வருமானம் வரக்கூடிய பூமி முப்பது வருடங்களுக்கு அரசனால் விடப்பட்டிருந்தது. மேற்கு நாட்டின் அந்தப் பாகத்தில் கொஞ்சக் காலமாகக் குழப்பம் நடந்துகொண்டிருக்கிறது. அதாவது அங்குள்ள ஜனங்கள் அரசனுக்கு விரோதமாகக் கலகம் செய்துகொண் டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் இந்த அரியநாதம் பிரபு தம் பூஸ்திதி

யுள்ள விடத்தினருகிலிருந்து அதைப் பாதுகாக்காமல், தம்மிஷ்டப்படி சிற்றின்ப விஷயங்களை யனுபவிப்பதற்காக இலவணபுரியில் தங்கியிருக்கிறார். அப்பிரபுவுக்கு வயது முதிர்ந்த போதிலும் அவர் நடக்கைகள் உலக இன்பங்களை யனுபவிக்க ஆவல் கொண்டிருக்கும் அற்ப அறிவுடைய துஷ்ட வாலிபர்களின் நடக்கைகளைப்போன்றனவே. அவர் தம் அயோக்கிய குணங்களை யெல்லாம் மறைத்து வைத்துக்கொண்டு, துர் நடக்கைகளில் அமிழ்ந்து கிடக்கும் அரசனுக்குத் தக்கபடி ஆலோசனை கூறிக்கொண்டும், அவனுடைய இழிவான நடக்கைகளை யெல்லாம் புகழ்ந்து அவற்றிற்கு உதவிசெய்தும் அவன் தயவிருந்தால் தமது அயோக்கியநடக்கைகளுக்கு அனுகூலமாயிருக்குமென்ற எண்ணத்தோடு நடந்துகொண் டிருப்பார். அரசன் கேளிக்கை நடக்கு மிடத்திற்குச் சென்றதும், மதனம்பாள் சிமாட்டியிடம் அன்போடு வார்த்தையாடிக்கொண்டே அவள் உட்காரும் சிங்காசனம் போன்ற ஆசனத்தில் தானும் அவளோடு உட்கார்ந்தான்.

அரசன் உட்கார்ந்ததும் சாதுரியமாகப் பேசிக்கொண்டே அங்கு வந்திருக்கும் பலவித வேடதாரிகளைப் பற்றியும் குறிப்பான வார்த்தைகளைக் கூறத்தொடங்கினன்.

அரசன் வந்திருக்கிற சங்கதி மெதுவாய் ஒருவரிடமிருந்து ஒருவருக்கு அறிவிக்கப்பட்டு எல்லாவிருந்தினருக்கும் பரவிவிட்டது. அதனல் தங்குதடையின்றி நடந்துகொண்டிருந்த கேளிக்கை அடங்கத்தொடங்கியது. இதையறிந்த அரசன் தானே உரத்தசத்தத்தோடு கேளிக்கையாகப் பேசத்தொடங்கினன். அச்சமிக்கையை யறிந்ததே அனைவரும் கூச்சமாவது அடக்கமாவதின்றித் தங்கள்

தங்கள் மனத்திருப்தியின்படி கேளிக்கையாய்க் காலத்தை யனுபவிக்கத் தொடங்கினர்கள். மதனும்பாள் சீமாட்டி யின் புத்திரன் தான் இன்னவனென்று யாருக்கும் தெரி யாதென வெண்ணிக்கொண்டு யாவரையும் அளவுமீறிக் கேலிசெய்துகொண்டும் ஆடிக்கொண்டு மிருந்தான். ஆனல் உண்மையில் அவன் இன்னவனென்று யாவரு மறிவார்களானதால் அவனைத் தட்டிக் கொடுத்துப் பட்ச மாகவே நடத்தினர்கள்.

அக்கூட்டத்தில் கிழக்குத் தேச மாந்திரீகன் போல் வேட மணிந்த ஒரு உயரமான ஆள் இருந்தான். அவன் துர்க்கி நாட்டாரணியும் உடைகளைப்போன்ற மிக்க விலை யுயர்ந்த உடையணிந்திருந்தான். சிரசில் கறுப்புப் பட்டின லாகிய நீண்ட தொப்பி யணிந்திருந்தான். அதன் இரு புறங்களிலும் சரிகையினல் எந்திரங்களும் மந்திர அட்சரங் களும் சித்திரிக்கப்பட்டிருந்தன. தந்தத்தினல் செய்யப் பட்டுப் பொற் பூண்கள் கட்டி மந்திரங்கள் செதுக்கப்பட்ட பொற்றகடுகள் பதித்ததும், இரத்தினங்கள் பதிக்கப் பட்டது மாகிய ஒரு மாத்திரைக்கோல் கையில் வைத் திருந்தான். அவனுடைய வெள்ளிக்கம்பிகள்போன்ற தாடி நீண்டு மார்பு வரையில் தொங்கிக்கொண் டிருந்தது. ஒரு கரத்தில் நவக்கிரக சக்கரம் போடப்பட்டிருந்த ஒரு வெள்ளித்தகடு வைத்துக்கொண் டிருந்தான். அவனுடைய உயரமும் அழகும் வாய்ந்த கட்டு விட்ட தேகமும் கம்பீரத் தோற்றமும் வேடத்தின் தன்மையும் காண்போர் மன தைக்கவர்ந்ததால், யாவரும் அவனை யுற்று நோக்கினர்கள். சிலர் வேடிக்கையாக "அய்யா மாந்திரீகரே! நான் யாரென்று கூறிவிடும் பார்ப்போம்" என்றார்கள். அக் காலத்தில் மாந்திரீகன் என்றால் அவனுக்குச் சோதிடமும் தெரியும். ஆதலால் சிலர் "அய்யா! என் ஜாதகப்பலனைக்

கொஞ்சம் கூறும்'' என்றார்கள். சிலர் அக்கரையோடு கேட்பவர்கள் போலவே அபிநயித்தார்கள். ஆனால் அம் மாந்திரீகனோ முதலில் ஒருவருக்கும் விடையளிக்காமல் நாற்புறங்களிலும் திரிந்துகொண் டிருந்தான். "சே! நமது சாமர்த்தியத்திற்கு இவர்களெல்லாம் ஒரு ஈடா'' என்று கருதியவன் போல் ஒருவரையும் இலக்ஷியம் செய்யாதவனாகவிருந்தான். ஆனால் உண்மையில் அவன் தன் முகமூடியிலுள்ள துவாரங்களின் மூலமாய் அங்கு வந்திருந்த ஒவ்வொரு ஆடவனையும் உன்னிப்பாய்க் கவனித்தான். புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு ஒரு புறமாய் உட்கார்ந்திருந்த நமது மாணவன் உலகநாயகனையும் கவனித்தான். மலைநாட்டு ஜமீன்தாரன் போல் கம்பீரமாக வேடந்தரித்திருந்த கர்னல் குமரவேலையும் அவன் நன்றாகக் கவனித்தான்.

மாந்திரீகன் எங்கும் சுற்றிப்பார்த்துக் கொண்டே போனபோது, அரசனும் மதனம்பாள் சீமாட்டியும் இருக்கும் அறைக்குச்சென்று அவர்களிருவரும் உட்கார்ந்திருக்கும் ஆசனத்திற்கு அருகில் எவ்வளவு தூரம் வரையில் செல்வது மரியாதையோ அவ்வளவு தூரம் சென்று நின்று அரசனுக்கும் சீமாட்டிக்கும் வந்தனமளித்தான். அந்த இடத்திற்குச் சற்று தூரத்தில் சீமாட்டியின் இரண்டு தோழிகளும், அரியநாதம்பிரபுவும் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். மாந்திரீகன் இரண்டொரு நிமிடங்கள் அங்கு நின்று உற்றுநோக்கினான். அரசன் விளையாட்டாக அவனை இரண்டொரு கேள்விகேட்டபோது அவன் ஒன்றுங்கூறாமல் அங்கிருந்து திரும்பி விட்டான்.

திரும்பிய மாந்திரீகன் அங்கிருந்த இரண் டறைகளுக்கும் இடையிலிருந்த விடத்தில் நின்று சிலருக்கு

அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கினன். ஆரம்பத்தில் கேட்ட இரண்டொருவர்க்கு அவன் கூறிய விடைகள் தற்செயலாய் அவர்கள் மனதி லிருந்த விஷயங்களுக்குச் சற்று பொருத்தமானவைகளாக இருக்கவே மாந்திரீகனிடம் அனேகர் வந்து சூழ்ந்துகொண் டார்கள். அனேகர் ஆவலோடு தங்கள் விஷயத்தைப்பற்றிக் கேட்க விரும்பி அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். இதைக் கண்ட மலைநாட்டுப் பிரபு வேடந் தரித்திருக்கும் கர்னல் குமரவேல் மாந்திரீகனருகில் வந்து "ஐயா மாந்திரீகரே! எனது உடைவாளுக்கும் உமது வெள்ளைத் தாடிக்கும் பந்தயம்; நான் யாரென்று மட்டும் கூறி விடும் பார்ப் போம்" என்றான்.

மாந்திரீகன் சாந்தமாகவே "எதோ என்னருகில் வா பார்ப்போம்" என்றதும் யாவரும் ஆவலோடு அவனருகில் சென்று சூழ்ந்து கொண்டார்கள். மந்திரீகன் "நீங்களனை வரும் எட்டச்செல்லுங்கள். ஒருவருக்குக் கூறுவதை இன்னொருவர் கேட்கலாகாது; போங்கள் தூரத்தில்" என் ருன். யாவரும் அவ்வாறே யெட்டச் சென்ற பின் மாந் திரீகன் கர்னல் குமரவேல் அருகிற் குனிந்து அவன் செவியில் குசுகுசு வென்று இரண்டொரு வார்த்தைகள் கூறினன். உடனே கர்னல் திடுக்கிட்டுத் துள்ளி,

"மிக்க ஆச்சரியமே. ஆம். நம்பத்தகாத வியப்பாக விருக்கிறது" என்ருன்.

இதைக் கேட்டதே யாவர்க்கும் மிக்க வியப்பாய் விட்டது. இன்னும் மிக்க ஆவலோடு மாந்திரீகனைச் சூழ்ந்து கொண்டார்கள். வட நாட்டு இடைச்சி போல் வேட மணிந்திருந்த ஒரு பெண் முன்னமே மாந்திரீகனிடம் கேள்விகேட்டுத் திருப்தியான விடை பெற்றவள் அவனை

நோக்கி, "பெரியோரே! அதோ புத்தகத்தையே பார்த்துக்கொண்டு அம்மூலையிலேயே உறங்கிக்கொண் டிருக்கும் அம்மாணவர் யார்? அதை மட்டும் கூறி விடும் பார்ப்போம். உமக்கு ஒரு கொழுத்த ஆடு அளிக்கிறேன்" என்முள். அதைக்கேட்டதும் அங்கிருந்த அனைவரும் மிக்க உற்சாகத்தோடு "ஆம் ஆம் கூறும் கூறும்" என்று ஆரவாரித்தார்கள். மாந்திரீகன் "அவ்வாறு பகிரங்கமாகக் கூறமாட்டேன். யாவரும் முகமூடிகளைக் களைந்துவிடும் வேளை வருவதற்குள் அவ்வாறு பகிரங்கப்படுத்திவிட்டால் நமது சீமாட்டியால் மிக்க அன்போடு வைத்திருக்கும் இக்கேளிக்கையின் உற்சாகம் குறைந்துவிடும். அது சீமாட்டிக்கு வெறுப்பை யுண்டாக்கும். ஆனல் இம்மாணவர் அனுமதி யளித்தால் அவர் செவியில் கூறும் இரண்டொரு மொழிகளால் அவருடை சாமார்த்தியமான மாறு வேடத்திற்குள்ளிருக்கும் உருவம் என் கண்களுக்கு மறைந்திருக்க முடியாதென்று அவரே ஒப்புக்கொள்ளும்படி நான் செய்கிறேன்" என்முன்.

மாணவன் வேடந்தரித்த நமது உலககாயகனுக்கு இக் கேளிக்கையில் கலக்க விருப்பமில்லை ஆயினும் இப்போது மற்ற பேர் அனுபவிக்கும் வேடிக்கைக்கு இடைஞ்சல் செய்வது மரியாதையா யிராது என்று கருதி அங்கிருந்து எழுந்து "மாந்திரீகரே! நான் சந்தோஷமாக அனுமதி யளிக்கிறேன். ஏதோ யார் என்று கூறும் பார்ப்போம்" என்முன்.

மற்ற ஜனங்களனைவரும் மிக்க ஆவலோடு பார்த்துக் கொண்டே யிருந்தார்கள். மாந்திரீகன் மாணவனருகிற் சென்று அவன் செவிகளில் இரண்டொரு வார்த்தைகளை கூறினன். அவைகளைக் கேட்டதே அம்மாணவன் மிக்க

வியப்படைந்து பிரமித்து விட்டான். அவன் தேகத்தில் திடீலென்று மின்சாரச் சக்தி பாய்ந்ததுபோ லாய்விட்டது. அவன் அவயவங்கள் துடித்தன. சற்றுநேரம் பிரமித்து நின்றான். பிறகு அங்கு யாவரும் தங்கள் உண்மை யுருவை மறைத்திருக்கிறார்களென்பதையும் இப்போது தங்கள் பெயர்களை வெளியிடமாட்டார்க ளென்பதையுங்கூட மறந்து மிக்க ஆத்திரத்தோடு மாந்திரீகரை நோக்கி "நீர் யார் கூறும், கூறும்" என்றான்.

மாந்திரீகன் "பேசாமலிரு." என்று கூறி மறுபடி குனிந்து அவன் செவியில் சில வார்த்தைகளைக் கூறினான். அவற்றைக்கேட்டதே மாணவன் "மிக்க சந்தோஷம். கட்டாயம் மறக்கவேமாட்டேன்" என்றான்.

இப்போது அங்கிருந்த அனைவர்க்கும் மாந்திரீகன் விஷயத்தில் சொல்லொணா வியப்புண்டாயிற்று. அவன் மாணவனுக்குக் கூறியது இன்ன விஷயம் என்று அவர்கள் அறியார்களாயினும், மாணவன் மறைத்து வைத்திருக்கும் ஏதோ பெரிய இரகசியத்தை மாந்திரீகன் கூறிவிட்டானென்றும், அதனால்தான் மாணவன் அத்தகைய விடையளித்தானென்றும் எண்ணிக்கொண்டார்கள். நடந்த சங்கதிகள் யாவும் பார்த்துக்கொண்டிருந்த கையாள் வேடந்தரித்த மதனம்பாள் சிமாட்டியின் புத்திரன் மாந்திரீகன் அருகிற் சென்று அவன் கரத்தை முரட்டுத்தனமாகப்பற்றிக்கொண்டு "கிழவரே! ஏதோ நான் யாரென்பதை மட்டும் நீர் கூறிவிட்டால் மெய்யான மந்திரவாதிதான். ஏதோ கூறும்" என்றான்.

மாந்திரீகன்:—"சிறுவனே! நீயாரென்று கூற மந்திரம் கொஞ்சமும் வேண்டியதில்லை" என்று கூறிக் குனிந்து அவன் செவியில் "நீ யுன் தாயாரிடம் சென்று

' அம்மா! இங்கொரு ஆச்சரியமான மந்திரவாதி வந் திருக்கிறார். அவர் நான் மதனாம்பாள் சிமாட்டியின் புத் திரனென்று கூறிவிட்டார். அவர் உன் செவியில் இர கசியமாக இரண்டொரு வார்த்தைகள் கூறவேண்டு மென விரும்புகிறார்' என்று கூறு" என்றான்.

இதைக்கேட்டதே அவ்வாலிபன் மிக்க சந்தோஷ மடைந்து துள்ளிக் குதித்துக் கொண்டே ஓடிச் சிமாட்டி யருகிற் சென்று அவள் தோளைப்பற்றிக்கொண்டு,

"அம்மா அம்மா! இங்கே யொரு மந்திரவாதி வந்திருக்கிறான். உண்மையாகவே மந்திரவாதி. வேடதாரி யல்ல. நான் எவ்வளவோ சாமார்த்தியமாக முகமூடி யணிந்துகொண் டிருக்கிறேன். மேலும் என்னைப்போல் இன்னும் நான்கைந்து சிறுவர்கள் இங்கே யிருக்கிறார்கள். நான் யார் என்பதை யவன் கூறிவிட்டான். மந்திரத்தா லல்லாவிட்டால் அவன் கூறியிருக்கமுடியாது. இது மட்டு மல்ல அவன் அனேகருக்கு அவர்கள் யாரென்பதைப் பற்றியும் ஆச்சரியமான சங்கதிகளையும் கூறினான். அந்த உயரமான மலைநாட்டு ஜமீன்தாருக்கும், அந்த மூலையிலிருக் கும் மாணவனுக்கும் மிக்க ஆச்சரியமான சங்கதிகளை யெல் லாம் கூறினான். அவர்கள் மிக்க வியப்படைந்து திடுக்கிட்டு விட்டார்கள்." என்றான்.

சிமாட்டி "ஆ! அப்படியா" என்று புன்னகை புரிந்து கொண்டே அரசனை நோக்கினாள். ஏனெனில் அவன் என்ன வேடமணிந்திருக்கிறானென்பதைப் பற்றி யாவருக் கும் இரகசியமாகக் கூறப்பட்டிருப்பது அரசனுக்குத்தெரி யும்.

அரசன் "ஏதோ அந்த மாந்திரீகனை யிங்கழைத்து வாருங்கள்" என்றான். மாந்திரீகன் அங்கு வந்ததும் அர

சனும சிமோட்டியும் உட்கார்ந்துகொண் டிருக்கும் ஆசனத் திற்கருகில் நின்று இருவர்க்கும் வணக்கமாய் வந்தனமளித் தான். அரசன் அவனை நோக்கி, "மாந்திரீகரே! தாம் நவக் கிரகங்களை நன்றாய் வசியம் செய்திருப்பதாய்த் தெரிகிறது. ஏதோ ஏதாவதொரு வழியில் தம்முடைய சாமார்த்தியத் தைக்காட்டும் பார்ப்போம்" என்றான்.

**மாந்திரீகன்:**—"அரசே! எந்தச் சங்கதியைப்பற்றிக் கூறச் சொல்கிறீர்கள்?"

**அரசன்:**—உமது பிரியப்படி எதைப்பற்றி யேனும் கூறும். இப்போது சிலருக்கு அவர்கள் செவிகளில் ஏதோ கூறி அவர்கள் இன்னவர்களென்று தாம் தெரிந்து கொண்டதாக அறிவித்தீர். இப்போது அதைவிட விசேடமான சாமார்த்தியம் இருப்பதாகக் காட்டும். இதோ நமது அரியநாதம் பிரபு விருக்கிறார். அவர் செவியில் ஏதாவது கூறி அவரை யதிசயிக்கச் செய் யும் பார்ப்போம். ஏதாவது, அவர் யாருக்கும் தெரியா தென்று நினைத்திருக்கிற அவருடை இரகசியம், முத லிய ஏதேனும் ஒன்றைக்கூறும்" என்றான்.

அருகில் நின்று தோழிகளிடம் சம்பாஷித்துக்கொண் டிருந்த அரியநாதம் பிரபுவுக்கு இவ்விஷயம் பிரியமில்லை. ஏனெனில் இதுகாறும் நடந்த சங்கதிகளால் மாந்திரீகன் ஏதோ கொஞ்சம் சக்தியுடையவனாகவே யிருக்கிறானென்று யாவரும் கருதத்தக்கதாக இருந்தது. அதனால் அக்கிரம மும் அயோக்கியமுமான காரியங்களைச் செய்திருக்கும் அப்பிரபுவுக்கு எங்கே நமது இரகசியம் எதையேனும் உண்மையாகவே இவன் கண்டுபிடித்து விடுவானோவென்று பீதியுண்டாய்விட்டது. ஆகையால் அவர் முணமுணப்போடு நின்றார். மாந்திரீகன், அரசன் கூறியதற்கு "பார்க்கிறேன்"

என்று கூறிவிட்டுப் பிரபுவை யருகிலழைத்து அவர் செவி யில் இரண்டொரு வார்த்தைகளைக் கூறினன்.

அவற்றைக் கேட்டவுடனே அரியநாதம் பிரபுவின் முகத்தில் குபீலென்று இரத்தம் ஏறியதும், மறுவினடி முகம் சவம்போல் வெளுத்துவிட்டது. பிரபு மிக்க கலவர முற்று மிரட்சி யடைந்து பயங்கரத்தோடு மாந்திரீகன் முகத்தை யுற்று நோக்கினர். இதைக்கண்ட அரசன் ஆச் சரிய மடைந்து "மிக்க வியப்பு பிரபுவே! மாந்திரீகர் என்ன கூறினர்?" என்றான்.

**மாந்திரீகன்.**—"அரசே! ஒருவருக்குக் கூறப்பட்ட இரகசிய மான விஷயத்தை யின்னெருவர் கேட்க விரும்புவது சரியல்லவே" என்று மரியாதையாகவே கூறினன்.

அரசன் புன்னகை புரிந்துகொண்டே, "அப்படி யாயின் என் செவியில் ஏதாவது கூறும் பார்ப்போம்" என்றான். இதைக்கேட்டதே அங்கிருந்த அனைவரும் மிக்க வியப்பும் ஆவலும் கொண்டு, நடக்குங் காட்சியை இமை கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தார்கள். மாந்திரீகன் நிதானமாக அரசன் அருகிற்சென்று அவன் செவியில் ஏதோ இரண்டொரு வார்த்தைகளைக் கூறினன்.

அதைக் கேட்டதே அரசன் திடுக்கிட்டு விட்டான். அவன் முகத்தில் ஒருவித விகாரம் தோன்றியது. அவன் "ஆ! இது மிக்க அதிசயமே" என்று கூறி மாந்திரீகனை ஏற இறங்க நோக்கினன். தான் சந்தேகங்கொண்ட மனி தனவென்று அவன் உயரம் பருமன் முதலியவைகளை யுற்று நோக்கினன்; திருப்திப்படவில்லை. உடனே மாந்திரீகனை நோக்கி "அய்யா இப்படி வாரும், உமது முகத்தைப்பார்ப் போம்" என்று கூறி அவனைச் சற்றுதூரத்திலுள்ள தீபத்தி னருகில் அழைத்துச் சென்று முகமூடியைக்களையச் செய்து

பார்த்தான். மாந்திரீகன் மற்ற ஜனங்களிருக்கும் பக்கம் தன் முதுகைத் திருப்பிக்கொண் டிருந்ததால் அரசன் மட்டுமே அவன் முகத்தைப் பார்த்தான். ஆனால், அரச னுக்குத் தான் சந்தேகித்த மனிதனல்லவென்று தெரிந்த தோடு, அவனைத் தான் எப்போதேனும் கண்டிருப்பதாக வும் புலப்படவில்லை. அதன்மேல் அவன் "நீர் புது மனித னாக இருக்கிறீர். பிறகு எல்லாருமே முகமூடிகளைக் களைவ தோடு தங்கள் தங்கள் பெயர்களையும் கூறவேண்டும். நான் இப்போது உம்முடைய முகமூடியை நீக்கச் சொன்னது ஒழுங்கினமான நடக்கையே. முகமூடியை யணிந்து கொள்ளும்" என்று கூறிவிட்டுப்போய் உட்கார்ந்தான். மதனாம்பாள் சீமாட்டி அரசனை நோக்கி, "மாந்திரீகர் உம்மிடம் என்ன கூறினார். என்ன கூறினார்?" என்று கேட்டாள். அரசன் ஒன்றுமில்லை. அப்படி விசேஷமான விஷயம் ஒன்றுமில்லை யென்றான்.

இதற்கிடையில் தன் முகமூடியைக் கழற்றிவிட்ட சீமாட்டியின் புதல்வன் தன் தாயை நோக்கி "அம்மா! ஒரு சமாசாரம் கூற மறந்துவிட்டேன். மாந்திரீகன் உன் செவியில் இரண்டொரு வார்த்தைகள் கூறவிரும்புவதாகச் சொன்னான்" என்றான்.

சீமாட்டி தானே அத்தகைய முகமூடி யணியும் விருந்து வைத்து யாவரையும் வரவழைத்த போதிலும், தான் அதில் கலந்து யாவரோடும் சமரசமாகக் கேளிக்கை யனுபவிப்பது தன் கௌரவத்திற்குத் தாழ்ந்ததென்று கரு தியவள் போல் நிமிர்ந்து நின்று "ஆ! எனக்கா கூறுவதாகக் கூறினான்?" என்றாள். அதற்குள் அரசன் "நம்மைத்திடுக் கிடும்படி கூறினாரே, இவளுக்கு என்ன கூறுகிறார் பார்ப் போம்" என்றெண்ணிச் சீமாட்டியை நோக்கி "மதனா! மாந் திரீகர் சொல்வதைக்கேள். என்னதான் கூறுகிறார் பார்ப்

போம்'' என்றான். சீமாட்டி மாந்திரீகனை நோக்கி "அய்யா நீர் யாராக இருந்தாலும் சரி. என்ன கூறுகிறீரோ பார்ப்போம் வாரும்'' என்றாள். மாந்திரீகன் அவளருகிற் சென்ற போது அரசனும் கூடவருவதைக்கண்ட மதனம்பாள் அரசனை நோக்கி "தாங்கள் எட்டச்செல்லுங்கள். தங்கள் இரகசியத்தை நான் எப்படி யறியக்கூடா தென்றீரோ அப்படியே என் இரகசியத்தைத் தாங்க ளறியலாகாது'' என்றாள். அரசன் புன்னகை புரிந்து கொண்டே சென்று எட்ட விருந்த ஒரு ஆசனத்திலுட்கார்ந்து கொண்டான்.

மாந்திரீகன் சீமாட்டியி னருகிற்சென்று குனிந்து அவள் செவியில் இரண்டு மூன்று வார்த்தைகளை கூறினான். உடனே அச்சீமாட்டியின் முகம் வெளுத்துப் பயங்கரமான விகாரமடைந்தது. அவள் கண்கள் மிரண்டபார்வை யடைந்தன; மிக்க பீதியோடும் நடுக்கத்தோடும் மாந்திரீகனை யுற்று நோக்கி மனதில் உண்டான வேதனையைச் சகிக்கொணுமல் அடியற்ற மரம்போல் ஆசனத்தில் சாய்ந்து மூர்ச்சை யடைந்தாள்.

அதைக்கண்டதே அரசன் மிக்க ஆவலோடு எழுந்து அவளருகிலோடினான். தோழிகளும் மற்ற பேரும் அலறிக் கொண்டு ஓடிப் பலவித உபசாரங்களைச் செய்யத் தொடங்கினார்கள். ஆடவர்களில் சிலர் ஓடிப்போய்க் காற்று வரச் சாளரங்களைத்திறந்தார்கள். சீமாட்டிக்குச் சற்று நேரத்திற்குள் ஸ்மரணை வந்து விட்டது. உடனே அரசன் முதல் அனைவோரும் "எங்கே! எங்கே அந்த மாந்திரீகன்!'' என்று கூவினார்கள். உடனே அனேகர் ஓடிப்போய் மாந்திரீகனை யரசனிடம் அழைத்து வரத் தேடினார்கள். அவன் எங்கும் காணப்படவில்லை. சீமாட்டி விஷயமாய் யாவரும்

குழப்பத்திலிருந்த போது மாந்திரீகன் எப்படியோ போய் விட்டான்.

## 12-வது அத்தியாயம்

கர்னல் குமாரவேலின் ஆலோசனை—கர்னலும் அரியநாதம் பிரபும் ஒப்பந்தம் செய்து கொள்ளல்—அரசனும் மதனும்பாள் சீமாட்டியும்—கர்னலின் சதியாலோசனைகள்—

மதனும்பாள் தனக்கு ஸ்மரணை வந்ததும் தன் தோழிகளோடு தன் அறைக்குச் சென்றுள். அரசன் உண்மையில் அவளிடம் மிக்க அன்புடையவன். ஆகையால் நடந்த சம்பவத்தால் அவன் மனதிற்கு மிக்க அதிருப்தியும் வெறுப்பும் உண்டாயின. மாந்திரீகன் தன் செவிகளிற் கூறிய விஷயம் முன்னமே யவன் மனதிற்குக் கலக்கத்தை யுண்டாக்கி யிருக்கிறது. அதனுல் அரசன் மதனும்பாள் மூர்ச்சையாக விருக்கும் இடத்திற்குச் செல்லாமல் அவள் சற்று சுகமடைந்த பின் செல்லலாமென்று தான் இருந்த அறையின் ஒரு மூலையிலேயே உட்கார்ந்திருந்தான்.

இதற்கிடையில் சீமாட்டிக்கு நேர்ந்த சம்பவம் விருந்தினர் யாவர்க்கும் தெரிந்து விட யாவர்க்கும் உற்சாகம் குன்றி விட்டது. நடனக்கேளிக்கை தட்டென்று நிறுத்தப் பட்டது. சிரிப்பும் கேளிக்கையும் மாறிச் சிடுசிடுப்பும் குசுகுசு வென்ற சத்தமும் கேட்கத்தொடங்கியன. எல்லா ஆட்டங்களும் நிறுத்தப்பட்டன. யாவரும் தங்கள் முக மூடிகளைக் களைந்துவிட்டார்கள் அனேகர் தங்கள் மாளிகைகளுக்குத் திரும்பி விட்டனர். முதல் குழப்பம் உண்டான இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் நமது காப்டன் உலக நாயகனும் மெதுவாய் அங்கிருந்து நழுவி விட்டான்.

அரசன் சோர்வடைந்து அறையில் உட்கார்ந்திருந்த வன் தலை நிமிர்ந்து பார்த்த போது தன் எதிரில் அரிய நாதம் பிரபு நிற்பதைக்கண்டு "ஆ! பிரபுவே! மாந்திரீகன் உமக்கு அதிசயந் தோன்றும் படி ஏதோ கூறினானல்லவா? அது என்ன அத்தகைய இரகசியம்?" என்றான்.

பிரபு:—"மகாராஜா! தயவு செய்து அதை வற்புறுத்திக் கேட்காதிருக்கும் வண்ணம் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

அரசன்:—"அப்படியாயின் சரிதான். நான் தம்மைக் கேட்டதே ஒழுங்கல்ல. ஆயினும் அவன் யாரென்று உமக்குச்சந்தேகமாகவாவது புலப்படுகிறதா?" என்றான்.

பிரபு:—"மகாராஜா! அவன் குரலை மாற்றிப் பேசுவதோடு தான் அணிந்திருக்கும் வேடத்திற்குத் தக்கபடியாக வும் சம்பாஷிக்கிறான். அதனால் அவன் யாரென்று நான் எள்ளளவும் அறியக்கூடவில்லை. ஆயினும் மகா ராஜா அவர்கள் அவன் முகத்தைக் கண்டீர்களே!" என்றார்.

அரசன்:—"ஆம் பார்த்தேன். ஆனால் அம்முகம் நான் ஒரு போதும் பார்த்திராதது. கிடக்கட்டும் அதைப்பற்றி இனிப்பேசுவது வீண் வேலை" என்று கூறிவிட்டுத் தட்டென்றெழுந்து, பிரபுவைத் தன் பின் வரவேண் டாம் என்று சமிக்கை காட்டிவிட்டு அறையை விட் டுச் சென்றான்.

கர்னல் குமரவேல் தன் முகமூடியைக்கழற்றியபின் ஒரு அறையில் போய் உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையிலிருந் தான். மாந்திரீகன் தன்னிடமிருந்த சவரன்கள், மோதிரங் கள், கடிகாரம், தன் உத்தியோகம் யாவற்றையும் சூதாட் டத்தில் கெலித்துக்கொண்டவனும் பிறகு மதனம்பாள் சீமாட்டியின் விருந்திற்குவர ஒரு அழைப்புச்சீட்டு வாங்கிக்

கொண்டு தன் உத்தியோகத்தைத் தனக்கு அளித்தவனுமாகிய காப்டென் உத்தாண்டியே யென்று தெரிந்து கொண்டான். அவன் தன்செவியில் தான் யாரென்பதை மட்டுமே கூறியபோதிலும் கர்னல் மிக்க ஆச்சரியம் அடைந்தவன் போல் அபிநயித்தான். ஏனெனில் தான் அவனை யறிந்திருப்பதாக யாரேனும் சந்தேகங் கொள்வார்களென்று அவனுக்குள் பீதியாக விருந்தது. சீமாட்டி மூர்ச்சை யடைந்தபோது கர்னல் குமரவேல் சீமாட்டிக்கு உபசாரம் செய்வதில் மிக்க சிரத்தையாக விருந்தான். அதனால் மாந்திரீகன் எவ்வழியாய்ப் போய் விட்டானென்பதை யவன் கவனிக்கவில்லை. பிறகு யாவரும் அவனைத் தேடும்போது கர்னல் குமரவேல் அவனைப் பற்றித் தனக்குச் சந்தேகம் உண்டென்று சற்றும் பிரஸ்தாபமே செய்ய வில்லை. ஏனெனில் அப்படிச் செய்தால் தனக்கு அவன் யாரென்று தெரியும் என்பதாக யாவரும் எண்ணிக்கொள்வார்க ளென்றும், பிறகு பல கேள்விகளுண்டாகிக் கடைசியில் அவன் தன் மூலமாகவே அங்கு வந்தானென்பது தெரிந்து விடும் என்றும் கர்னலுக்குப்பயம். அது தெரிந்துவிட்டால் அரசனுக்கும், மதனம்பாள் சீமாட்டிக்கும் தன் மேல் மிக்க கோபமுண்டாகித் தனக்கு மிக்க கெடுதி நேரிடு மென்று அவன் நன்கறிவான்.

அப்படியிருக்க அவன் ஏன் அந்தக் காப்டெனைப்பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தான். காப்டென் உத்தண்டி சாதாரண மனிதனாக இரான் என்று கர்னலின் மனதிற்பட்டது. முன்னமே அவன் உருவத்தையும் கம்பீரமான முகவிலாசத்தையும் பார்த்தபோதே இவன் நல்ல அந்தஸ்திலிருந்தவன் என்று கர்னலின் மனதிற்குப்புலப்பட்டிருந்தது. அதோடு அவன் நல்ல சுத்தவீரனென்றும் தெரிந்தது. இப்போது அரசன், மதனம்பாள் சீமாட்டி, அரியநாதம்பிரபு இப்படி

சென்னை-600 008

பட்ட முதன்மையான ஆசாமிகளுக்குத் திகைப்பும் பீதியும் கலக்கமும் உண்டாக்கத் தக்க சங்கதிகளை யிவன் அறிந் திருக்கிறான் என்று தெரிந்தது. அவர்களைப்பற்றிய பயங் கரமான இரகசியம் இவனுக்குத் தெரிந்திருக்கிறவரையில் இவன் மிக்க மேலான பதவிக்கும் வந்து விடக்கூடும் என்று கர்னலின் மனதிற்பட்டது. முன்பு உத்தண்டியிடம் விருந் திற்கு வரும் அழைப்புச்சீட்டை யளித்த போது கர்னல் அவனிடம் கடுகடுப்பாகவே பேசினான். இப்போது அவனை மெதுவாகச் சினேகம் செய்துகொண்டு அவனுக்குத்தன் மேல் விசுவாசம் உண்டாகும்படி செய்துகொள்ள வேண்டு மென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு அதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே யிருந்தான். கர்னலின் மனதில் திடீ லென்று ஒரு ஆலோசனை யுதித்தது. அவன் உடனே எழுந்து அறையை விட்டு வெளியில் செல்ல முயன்றான். அச்சமயம் அரியநாதம் பிரபு உள்ளே வந்ததும் கர்னலின் தோளைப்பற்றிக்கொண்டு "ஆ! மாந்திரீகன் உனக்கும் ஏதோ இரகசியம், அதாவது நீ யாரென்பதைக்கூறி விட் டானல்லவா. உனக்கு அவன் யாரென்று தெரியும், அல்லது அவனைப்பற்றிச் சந்தேகமாவதிருக்கு மென்று நம்புகிறேன். ஏனெனில், அவன் உன்னை யறிந்து கொண்ட வரையில் நீயும் அவனை யறிந்துகொண் டிருப்பாய். கேவலம் சந்தேகப் பட்டேனு மிருப்பாய். அல்லவா?" என்றார்.

கர்னல்:—"சந்தேகம் இருக்கலாகும்..."

பிரபு:—"ஆனால் கூறக்கூடாது என்கிறாயாக்கும். இதோபார் கர்னல் நாம் நெடுநாட்களாக அறிமுகமாக விருக்கி றோம், சூதாடு மரங்கத்தில் பன்முறை சந்தித்திருக்கி றோம். நான் உனக்கு அனேகந்தரம் கடன் கொடுத் திருக்கிறேன். உன் நிலைமை யெனக்கு ஏறக்குறைய

நன்ருய்த்தெரியும். இப்போது இந்த மாந்திரீகன் யாரென்பதை நான் கட்டாயம் அறியவேண்டும். எப்படியாவது கூடியசீக்கிரம் நான் அவனைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். காரணம் எதுவாக வேனும் இருக்கட்டும். எனக்கு அரசனிடம் இருக்கும் செல்வாக்கு எத்தகைய தென்று உனக்கு நன்ருய்த் தெரியும். உனக்கு மேல் பதவியாகிய ஜனரல் பதவியும், பிரபுப்பட்டமும் கிடைக்கும்படி நான் செய்கிறேன். அவசியம் செய்வேன். அந்த மாந்திரீகன் யார் என்பதை உடனே கூறிவிடு. உனக்கு அது விஷயத்தில் ஏதேனும் அய்யமிருந்தால், அச்சந்தேகத்தைத் தெளிவித்துக்கொண்டு கூறுவதாக வாக்குத்தத்தமளி; எப்படியேனும் நீ அதை யறிவிக்க வேண்டும்'' என்ருர்.

கர்னல் குமரவேல் "பிரபுவே! தங்கள் அன்பிற்காக மிக்க நன்றியோடு வந்தனமளிக்கிறேன். என்னுல் கூடியவரை யிதற்காக முயற்சி செய்கிறேன். ஆனல் அரசன் அவன் முகத்தைப்பார்த்தாரே'' என்ருன்.

பிரபு:—"அரசர் உமக்குக் கூறி யிருப்பார் என்கிருயோ? அப்படி யொன்று மில்லை. அரசருக்கு அவன் புது மனிதனுக விருக்கிருன். அந்த விஷயத்தைப் பற்றிப் பேசவே அரசனுக்குப் பிரியமில்லை. இன்றேல் அவன் எப்படி யிருக்கிருனென்று அவன் அடையாளங்களை யேனுங் கூறியிருப்பார். அவர் அந்தச் சங்கதியைப்பற்றியே பேசமாட்டார். அது எனக்கு நன்ருகத்தெரியும். நான் உன்னையே இவ்விஷயத்தில் பூரணமாக நம்பி யிருக்கிறேன். நீ ஆலசியம் செய்யவேண்டாம். நான் வாக்குத்தத்தம் செய்தபடி செய்வேன். நான் கூடியசீக்கிரதில் மிக்க அவசியமாக அம்மனிதன்

யாரென்றறிய வேண்டியது அவசியம்." என்று மிக்க மனக்கலக்கத்தோடு கூறினர்.

கர்னல் குமரவேல் "பிரபுவே! நான் கட்டாயம் தங்கள் பிரியப்படி செய்கிறேன்" என்று கூறினன்.

ஆனல் காப்டன் உத்தண்டியின் பெயரைக்கூறி விடலாகாதென்று மட்டும் தனக்குள் தீர்மானம் செய்துகொண்டான்.

இதற்குள் அரசன் மதனம்பாள் சீமாட்டியின் அறைக்குச் சென்றான். அச்சமயம் அச்சீமாட்டி மிக்க கலவரமும் பீதியுமடைந்த முகக்குறியோடு ஆசனத்தில் உட்கார்ந்திருந்தபடியால் முதலில் அரசன் வந்ததை யவள் கவனிக்க வில்லை. அவள் எழுந்து அரசனைக்கண்டதும், முதலில் முகத்தைச் சுளித்துக்கொண்டாள். ஆனல் உடனே அவளுடைய சுபமான சாமர்த்திய குணம் மேற்கிளம்பியது. அதாவது அரசனிடம் தன் பூரணச்செல்வாக்கு எப்போதும் சற்றும் குறையாமலிருப்பதற்காக அவள் மிக்க சாமார்த்தியமாகவும் தந்திரமாகவும் நடந்து கொள்வது வழக்கம். எப்போதும் சற்றும் முகவாட்டமாவது வெறுப்பாவது மனச்சோர்வாவது காட்டாமலே நகைமுகத்தோடிருந்தால்தான் அரசனுக்குப்பிரியமாகவும் சந்தோஷமாகவுமிருக்குமென்று அவளறிவாள். அத்தகைய தந்திரங்களாலும், எப்போதும் அவன் பிரியம்போல் நடப்பதையே விரதமாகக் கொண்டவள்போல் அபிநயிப்பதாலும், அவனுக்காக உயிரையும் விட்டுவிட ஆயத்தமா யிருப்பவள் போல் நடிப்பதாலுமே அவள் அரசனைப் பூரணமாக வசியம் செய்துகொண் டிருந்தாள். ஆ! கணவனல்லாத அன்னிய புருடர்களைத் தங்கள் சுயநலத்திற்காக மயக்கித் தங்கள் மாயவலைக்குள் சிக்கச்செய்யும் துஷ்டமாதர்களின் இந்திர ஜாலங்களை யளவிட்டறிய யாரால் கூடும்.

ஆகையால் அரசனைக்கண்ட மறுநிமிடமே மதனம்பாள் தன் மனதிலிருந்த திகிலையும் வியாகூலத்தையும் அடக்கிக் கொண்டு நகை முகங்காட்டி அரசனைத் தன் அருகில் உட்காரும்படி உபசரித்தாள்.

அரசன் அவள் அருகிலுட்கார்ந்து "ஆ மதனம்பாள்! நீ மிக்க மனவேதனை யடைந்து விட்டாய்; கேளிக்கை விளையாட்டுகளனைத்தும் முன்னடியே கலந்து விட்டன. விருந்துண்ண நீ பந்திக்கு வரமாட்டாயோ?'' என்றான்.

**சீமாட்டி:**—"என்னை மன்னிக்கவேண்டும்; என்மன நிலைமை மிக்க அலண்டுவிட் டிருக்கிறது. நான் இங்கேயேயிருக்க அனுமதியளிக்கவேண்டும். ஆயினும் தாங்கள் பிரியப்படி நடப்பதே என் முதல் கடமை" என்றாள்.

**அரசன்:**—சே சே! நானுவது உனக்கு ஆக்கியாபிப்பதாவது. உன் விருப்பப்படி நடப்பதே எனக்குச்சந்தோஷம். ஆனால் அந்த மாந்திரீகன் உனக்கு அத்தகைய மனக்கலக்கம் உண்டாகும் வண்ணம் என்ன மாய ஜாலம் செய்தான்? உன்னிடம் என்ன கூறினான்?'' என்று வினவினான்.

மதனம்பாள் "என் காதலரே! அதைப்பற்றிக் கேட்காமலிருக்கும் படி தங்களைப்பிரார்த்திக்கிறேன். அது மிக்க பயங்கரமானது. அதை நினைக்கும் போதே என் மனம் சொல்லொணப்பயமும் நடுக்கமும் அடைகிறது. என் அறிவு கலங்கி விடுகிறது. ஆயினும் அவன் அணிந்த வேடத்திற்குத் தக்கபடி விளையாட்டாகவே அவன் கூறி யிருக்க வேண்டும். ஆயினும் அது அளவு மீறிய நடக்கை" என்றாள்.

அரசன் "சே! இது மிக்க கெட்ட செய்கை; நாம் இருவரும் அன்னியோன்னியமாக விருப்பதும், என்னிடம்

உனக்கு அதிக செல்வாக்கிருப்பதும் யாவரு மறிந்தனவே. அந்தச்செல்வாக்கு குறைந்து விடும், நீ யரசன் அன்பை யிழந்து விடுவாய் என்று இப்படிப்பட்ட சங்கதி யேதேனும் அவன் உளறி யிருப்பான். அப்படித்தானே'' என்றான்.

சீமாட்டி நாம் அப்படியே கூறி விட்டால் இன்னும் கேள்விக்கிடமில்லாது போம் என்றெண்ணிக்கொண்டு "ஆம் ஆம். நீரும் அவன் உமக்குக் கூறியவற்றால் கலக்க மடைந்து விட்டீர் போல் தோன்றினீர். உமக்கு என்ன கூறினான். என்னைப்பற்றி ஏதேனும் கூறினானோ?'' என்றாள்.

அரசன் :—"இல்லை இல்லை. உன்னைப்பற்றி அவன் கூறியிருந்தால் உனக்கே ஏதேனும் கூறும்படி நான் அனுமதி யளித்திருப்பேனா இல்லை. என்னுடைய ஒரு சிறு இரகசியத்தை யவன் எப்படியோ அறிந்து கொண்டு கூறினான்''.

சீமாட்டி :—ஆ! இப்போதுதான் நினைப்புவந்தது. தாங்கள் அவன் முகத்தைப்பார்த்தீர்களல்லவா. அவன் யாரென்று அறிந்துகொண் டிருப்பீர்கள்.

அரசன்:—பார்த்தேன். ஆனால் அவன் நான் ஒருபோதும் காணாத மனிதன். யாரென்று எனக்கு விளங்கவில்லை ஆனால் நல்ல கம்பீரமான உருவமுடையவன். சே! நாமேன் வீணாய் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க வேண்டும். நீ பந்திக்கு வராதவரையில் நாம் இருவரும் இங்கேயே போஜனம் செய்யலாம்.

அரசனையும் சீமாட்டியையும் அங்கேயே விட்டுவிட்டு அரண்மனையை விட்டுப்புறப்பட்ட கர்னல் குமரவேலைக் கவனிப்போம். அரியநாதம் பிரபு தன்னிடம் கூறிய விஷயத்தால் அவனுக்கு வலிய நல்ல அதிஷ்டம் வந்ததுபோலாயிற்று. காப்டென் உத்தண்டியை மறுபடி சந்தித்து

அவனிடம் தந்திரமாகச் சினேகம்செய்து பார்த்து அவனுல் தான் கருதியபடி தனக்கு நன்மை கிடைக்காவிடின், அப்போது அவன் இன்னுனென்று அரியநாதம் பிரபுவிடம் வெளியிட்டு அவர் வாக்களித்தபடி உயர்ந்த உத்தியோகமும் பிரபுப்பட்டமும் பெறுவதென்று கர்னல் தனக்குள் தீர்மானித்துக்கொண்டான்.

காப்டென் உத்தண்டி சாதாரண மனிதனல்ல வென்றும், அவன் யாரோ பிரக்யாதி பெற்றவன் என்றும், அவனிடம் மிக்க சாமார்த்தியங்களெல்லாம் அடங்கி யிருக்கின்றனவென்றும், கர்னல் மனதிற்றெளிவாகத் தோன்றியது. ஆகையால் அவன் நட்பைப்பெறத் தன்னுல் கூடிய பிரயத்தன மனைத்தும் செய்வதென்றும் தீர்மானித்துக்கொண்டான். அவன் அரண்மனையில் அறையில் உட்கார்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தபோது அவன் மனதில் ஒருயோசனை யுதித்தது. உடனே அதன்படி செய்யத் தொடங்குவதென்று முடிவு செய்துகொண்டான்.

கர்னல் தான் தங்கியிருக்கும் காமதேனு ஹோட்டலுக்குச் சென்று தன் அறையில் உட்கார்ந்ததும் தன் வேலையாளாகிய அப்பாசாமியை யழைத்தான். அப்பாசாமி என்பவன் பதினறு வயதுடைய வாலிபன். மிக்க புத்தி சூக்குமமுடையவன். தந்திரம் சூது இவற்றில் தேர்ந்தவன். துஷ்டச் செயல்களுக்கு அஞ்சாதவன். அப்படிப்பட்டவன் கர்னலைப்போன்ற நடக்கையுடையவனுக்கு நல்லஉதவியென்று நாம் கூருமலே நன்கு விளங்கும். யாரேனும் மரியாதையான அந்தஸ்திலுள்ள ஒரு ஸ்திரீக்கு இரகசியமாகக் கடிதம் கொடுக்கவேண்டுமாயின் அப்பாசாமி அதற்குத் தகுந்த ஆளே. கர்னலைக் கடன்காரர்கள் தொந்திரவு செய்ய வந்தால் அப்பாசாமி மிக்க தந்திரமாக அவர்களைத்

திரும்பிச் செல்லும்படி செய்வான். இப்போது தான் சிந்தித்திருக்கும் காரியத்தை நிறைவேற்ற அப்பாசாமியே தகுதியுடையவனென்று கர்னலின் மனதிற்குப் புலப்பட்டது.

ஆகையால் கர்னல் அவனை யருகில் வரும்படி கூறி "அப்பாசாமி! நான் உனக்கு ஏதோ சில உதவிகள் செய்திருப்பதை நீ மறந்திருக்கமாட்டா யென்றே நம்புகிறேன். ஆகையால் எனக்கு ஏதேனும் ஒரு வேலை செய்யவேண்டுமாயின் அதன் யோக்கியதையைப்பற்றிக் கோழைகள்போல் தடுமாற்ற முறாமல் எனக்காக அதைச் செய்யத் துணிவாய் என்று நான் நம்புகிறேன்'' என்றான்.

**வாலிபன்:**—எஜமானே! தாங்கள் எப்படிப்பட்ட காரியம் கூறினும் நான் செய்ய ஆயத்தமாகவே யிருக்கிறேன்.

**கர்னல்.**—இங்கு வந்திருக்கும் காப்டன் உத்தண்டி யென்பவன் உன்னைக் கவனித்திருக்கிறானே. நீ என் அறைக்கு வரும்போதேனும் ஹோட்டல் முற்றத்தில் செல்லும்போதேனும் உன்னைக் கவனித்துப்பார்த்து நீ என் ஆள் என்று அறிந்துகொண் டிருப்பானோ?

**அப்பாசாமி:**—இல்லை யில்லை. என்போல் பல வாலிப வேலையாட்கள் ஹோட்டலிலிருக்கிறார்கள். அவன் என்னைத் தங்கள் ஆள் என்று அறிந்துகொண் டிருக்க முடியாது.

**கர்னல்.**—ஹோட்டல்காரன் காப்டனுக்கு ஒரு ஆட்காரனை யமர்த்தித் தருவதாய்க் கூறினானே, அவ்வாறே செய்துவிட்டானா?

**அப்பாசாமி.**—இல்லை. காப்டனுக்கும் இன்னும் வேலைக்காரன் அகப்படவில்லை.

கர்னல்.—"சரி. அப்படியானல் நீ ஒருகாரியம் செய்யவேண்டும். சிலநாட்களுக்கு நீ இன்னொரு எஜமானிடம்வேலை செய்யவேண்டும். சிலநாட்களுக்கு மட்டுமே, தெரிகிறதா. பிறகு பழையபடி என்னிடமே வந்துவிட வேண்டும். நீ என் உடைகளைக் களைந்து வைத்துவிட்டு உன் சாதாரண உடையணிந்து காப்டென் உத்தண்டியிடம் சென்று உன்னை வேலையில் வைத்துக்கொள்ளும்படி கேள். அப்போது அவன் உன்னை யறிந்துகொண்டிருக்கிறதும் இல்லாததும் தெரிந்துவிடும். அறிந்துகொண்டிருந்தால் நான் உனக்குச் சம்பளம் உயர்த்த மறுத்துவிட்டதால் என் வேலையினின்று நீங்கிவிட்டதாகக் கூறு. அவன் உன்னை யறிந்துகொள்ளாமலிருந்தால் உன் நடக்கையைப்பற்றி ஹோட்டல்காரனைக் கேட்கும்படி கூறு. நான் ஹோட்டல்காரனுக்குச் சொல்லி வைக்கிறேன். எப்படியாவது அவன் உன்னை வேலையில் வைத்துக்கொள்ளும்படி செய். பிறகு அவனுடைய விஷயங்களை யெல்லாம் அறிந்து அப்போதைக்கப்போது என்னிடம் வந்து கூறவேண்டும். கடைசியில் உனக்கு நேர்த்தியான பரிசளிப்பேன். ஒத்துக்கேட்டல், இரகசியமாகக் கடிதம் முதலியவற்றைப் பார்த்தல், பின்னல் சென்று பார்த்தல், பதுங்கி இருந்து பார்த்தறிதல் ஆகிய எல்லா வழிகளிலும் அவன் சங்கதிகளை யறியவேண்டும். அவன் பூர்வ சரித்திரம் என்ன? உண்மையில் அவன் யார்? மேற்கு நாட்டில் அவன் அரசன் கட்சியில் சேர்ந்து யுத்தம் செய்தவனு கலகக்காரர் கக்ஷியில் சேர்ந்தவனு? இங்கு என்ன காரியமாக வந்திருக்கிறன்? எங்கெங்கே போகிறன், அவன் சிநேகர் யார்? என்ன காரியம் செய்கிறன்? என்பவை முதலியயாவும் அறியவேண்டும். அவனைப்

பற்றிய இச்சங்கதிகளெல்லாம் எனக்கு அவசியம் தெரிய வேண்டியவைகளாக விருக்கின்றன. தெரிகிறதா? கடைசியில் நான் கூறியபடி நல்ல விசேஷமான பரிசளிப்பேன்" என்றான். வாலிபன் அவ்வாறே கட்டாயம் செய்வதாக ஒப்புக்கொண்டான்.

அதன்படியே அப்பாசாமி அன்று மாலையே காப்டன் உத்தண்டியைக் கண்டு பேசினான். காப்டன் உத்தண்டி அப்பாசாமி கர்னலின் வேலையாளென்பதை யறிந்துகொள்ளவில்லை. அப்பாசாமி கூறியபடி அவன் நடவடிக்கைகளைப்பற்றி ஹோட்டல்காரனை விசாரித்தபோது அவன் மிக்க திருப்தியாகவே கூறினான். ஆகவே மறுநாட்காலையே அப்பாசாமி காப்டன் உத்தண்டியிடம் வேலையாளாக அமர்ந்து விட்டான்.

---

## 13-வது அத்தியாயம்.

வேவு பார்க்கும் வேலைக்காரன்—கர்னல் குமாரவேலின் தீய எண்ணம்—காப்டேன் உத்தண்டி உளவறியும் சாமர்த்தியம்—

18647?

---

அந்த நாட்டில் எஜமான் தன் வேலைக்காரனுக்கு ஒரு விதக் குறிப்பான உடைகளை யளிப்பான். இதனால் உடைகளால் ஒருவனை வேலைக்காரனென் றறிந்துகொள்ளலாகும். அப்பாசாமி காப்டன் உத்தண்டியிடம் வேலைக்கமர்ந்த தினம் காலை காப்டன் அவனிடம் ஒரு சிறு மூட்டையை யளித்து இதை யெடுத்துக்கொண்டுவா வென்று கூறி அவனை யழைத்துக்கொண்டு வெளியிற் புறப்பட்டான்.

# மின்சாரமாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்தியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க விருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது. ஆதிமுதல் அந்தம் வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350 பக்கங்களுக்குமே லுடையது.

**விலை ரூபா 1—8—0.**

புது! துப்பறியும்!! நாவல்!!!

## வெளியாய் விட்டது.

# மஞ்சள் அறையின் மர்மம்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச்செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச்செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும்! குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1 8 0

தபால் கூலி பிரத்யேகம்.

---

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

**ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.**

இச்சஞ்சிகை 1915ஆ ஜூலைம் முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணு ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | | | தினகரசுந்தரி | 1 | 0 |
| 2-பாகமும் ... | 3 | 8 | பத்மாஸனி ... | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | ஆனந்தசிங் (மறுபதிப்பில்) | | |
| கனகபூஷணம் (மறுபதிப்பில்) | | | பவளத்தீவு-அச்சில் | | |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 | பூங்கோதை ... | 0 | 10 |
| கமலசேகரன் ... | 1 | 4 | மின்சாரமாயவன் ... | 1 | 8 |
| மதனபூஷணம் .. | 1 | 0 | குணசுந்தரன் ... | 0 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள் | 1 | 12 | சகோதரவாஞ்சை | 0 | 6 |
| | | | ஹை ஸ்கூல் பதிப்பு ... | 0 | 7 |

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

---

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.